# தமிழ்நாடு அரசு
# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNUSRB இரண்டாம் நிலை ஆண், பெண் காவலர் தேர்வு

பாடம் : **நடப்பு நிகழ்வுகள்**

பகுதி : **நடப்பு நிகழ்வுகள்**

## காப்புரிமை

தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையம் TNUSRB ஆண், பெண் இரண்டாம் நிலைக் காவலர் தேர்வுக்களுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரித்தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனி நபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும் .

**இயக்குநர்**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை**

# நடப்பு நிகழ்வுகள்


| வ. எண் | தலைப்புகள் | பக்க எண் |
|---|---|---|
| 1 | இந்தியா | **2** |
| 2 | தமிழ்நாடு | **16** |
| 3 | நியமனங்கள் | **23** |
| 4 | விருதுகள் | **29** |
| 5 | முக்கிய தினங்கள் | **37** |
| 6 | பொருளாதார நிகழ்வுகள் | **47** |
| 7 | திட்டங்கள் | **51** |
| 8 | விளையாட்டு நிகழ்வுகள் | **60** |
| 9 | உலக நிகழ்வுகள் | **65** |
| 10 | அறிவியல் & தொழில்நுட்பம் | **70** |
| 11 | மொபைல் செயலி | **77** |
| 12 | புத்தகங்கள் | **83** |

# இந்தியா

- ஐ.நா சபை உணவு மற்றும் விவசாய துறை, **உலகில் இயற்கை உணவுகள்** அதிகமாக உள்ள மாநிலங்களின் பட்டியலை வெளியிட்டது. இதில் **சிக்கிம் (இந்தியா)** மாநிலம் 100% **இயற்கை உணவுகள் உள்ள மாநிலமாக** தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- **பண்டிட் தீனதயாள் உபாத்யாயா தொல்லியல் நிறுவனம் (Pandit Deenadhayal Upadhaya institute of Archaeology)** உத்திரபிரதேச மாநிலத்தின் கிரேட்டர் நொய்டா நகரில் இந்திய பிரதமரால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.
    - இது சுமார் 289 கோடி செலவில் 25 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ளது.
- தஞ்சாவூர் மாவட்டம் **திருப்புவனத்தில்** வடிவமைக்கப்பட்டு தயாரிக்கப்படும் **திருப்புவனப்பட்டுச் சேலைக்கு புவிசார் குறியீடு** வழங்கப்பட்டுள்ளது.
- கர்நாடகா மாநிலத்தைச் சேர்ந்த உத்திரகாண்டா மாவட்டதில் விளையக்கூடிய **சிர்சி சுப்பாரி (SIRSI SUPARI)** என்ற பாக்கு ( **ARECNUT** ) வகைக்கு புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது..
- சமீபத்தில் ஈரோட்டில் விளையக்கூடிய **"ஈரோடு மஞ்சளுக்கு"** புவிசார் குறியீடு வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.
- **புவிசார் குறியீட்டு பதிவகம் 5 வகையான காபிகளுக்கு** புவிசார் குறியீடுகளை அளித்துள்ளது.
    1. கூர்க் அராபிகா காபி - கர்நாடகா
    2. வயநாடு ராபஸ்டா காபி - கேரளா
    3. சிக்மங்கலூர் அராபிகா காபி - கர்நாடகா
    4. பாபா புடங்கரி அராபிகா காபி - கர்நாடகா
    5. அரக்கு பள்ளத்தாக்கு அராபிகா காபி - ஆந்திரபிரதேசம்
- புவிசார் குறியீட்டு பதிவகம் சென்னையில் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.
- மிகவும் புகழ்பெற்ற கர்நாடக **இசைக்கலைஞரான டி.கே.பட்டம்மாளின் 100வது நினைவுதினம் மார்ச்** 19 அன்று அனுசரிக்கப்படுகிறது.

- இசைக் கச்சேரிகளில் ராகம், தாளம் மற்றும் பல்லவி ஆகிய மூன்றையும் நிகழ்த்திய முதலாவது பெண்மணி இவரே ஆவார்.

➢ **நிதி ஆயோக்கானது** எதிர்கால நடைமுறை மற்றும் கொள்கை முயற்ச்சிகலுக்கான வடிவமைப்பை உருவாக்குதல் மற்றும் முழுமையான நிதி சேர்ப்பிர்கான நடவடிக்கைகள் ஆகியவற்றை மேற்கொள்வதை நோக்கமாகக் கொண்ட **நிதி தொழில்நுட்ப மாநாட்டை** (**Fin tech conclave – Financial technology** ) புது டில்லியில் நடத்தியுள்ளது.

- நிதி ஆயோக் ஜனவரி 1 2015 ல் உருவாக்கப்பட்டது.
- இதன் தலைவர் – நரேந்திர மோடி.
- இதன் துணைத் தலைவர் - ராஜிவ் குமார்.
- இதன் CEO - அமிதாப் காந்த்.

➢ மத்திய அரசுப் பணியாளர் தேர்வு ஆணையத்தில் ஒரு தலைவர் மற்றும் 10 உறுப்பினர்கள் உள்ளனர்.

- இதன் **தலைவர் - அரவிந்த் சக்சேனா.**

➢ **தெலுங்கானா** மாநில அரசு புலிகளின் எண்ணிக்கையை பாதுகாப்பதற்காக, **மாநில புலிகள் பாதுகாப்புப் படையை (State Tiger Protection Force )** உருவாக்க முடிவு செய்துள்ளது.

- **புலிகள் பாதுகாப்புப் படையை உருவாக்கும் இந்தியாவின் முதல் மாநிலம் தெலுங்கானா ஆகும்.**

➢ **அமரீந்தர் சிங்** ( பஞ்சாப் முதல்வர் ) பியாஸ் நதியில் மட்டுமே காணப்படும் ஒரு அரிதான பாலூட்டியான **“சிந்து நதி டால்பின்களை” பஞ்சாப் மாநிலத்தின் நீர்வாழ் விலங்காக** அறிவித்துள்ளார்.

➢ ஐக்கிய நாடுகளின் **“சுற்றுச்சூழல் பாதுகாப்புத் திட்டதின்”** கீழ் வன விலங்குகளில் **புலம் பெயர்ந்த இனங்களை** (CMS) **பாதுகாப்பதற்கான** மாநாட்டின் “**13 வது பதிப்பை இந்தியாவானது 2020 ஆண்டு, பிப்ரவரி 15 முதல் 22 வரை காந்திநகரில் (குஜராத்)** நடத்த உள்ளது.

➢ **ஜம்மு & காஷ்மீர்** மாநில அரசானது லடாக் பகுதியின் **நிர்வாக / வருவாய் பிரிவை** மாநிலத்தின் **மூன்றாவது நிர்வாக பிரிவாக** அரிவித்துள்ளது

- ஜம்மு & காஷ்மீர் மாநில நிர்வாக அரசால் இதற்கான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. ஜம்மு & காஷ்மீர் ஆளுநர் **"சத்யபால் மாலிக்"** ஆவார்.
- ஜம்மு & காஷ்மீர் சிறப்பு அந்தஸ்து பற்றி கூறும் அரசியலமைப்பு விதி – 370.
- ஜம்மு & காஷ்மீர்கான அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்த நாள் - 26 ஜனவரி 1957.
- **இந்திய தேர்தல் ஆணையமானது** குடிமக்களுக்கு தங்கள் விவரங்களை சரிபார்க்கவும், விவரங்களை மாற்றவும், புதிப்பிப்பதற்காகவும் மற்றும் திருத்தங்களை மாற்றவும் "**வாக்காளர் சரிபார்ப்பு மற்றும் தகவல் திட்டம்**" ஒன்றை தொடங்கியுள்ளது.
    - இந்தியாவில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் இதற்கான உதவி மையம் அமைக்கப்பட்டுள்ளது. **வாக்காளர் உதவி எண் 1950ல்** அனைத்து தகவல்களை பெறலாம்.
- **மத்திய இரயில்வே அமைச்சர் பியூஸ் கோயல் ஆந்திராவின் புதிய இரயில் மண்டலத்தை** அறிவித்துள்ளார். இது தெற்கு **கடற்கரை இரயில்வே மண்டலம் (Southern Coast Railway )** ஆகும்.
- இதன் தலைமையிடமாக **விசாகப்பட்டினம்** உள்ளது. இது இந்தியாவின் **18 வது இரயில்வே மண்டலமாகும்.**
- **ஏப்ரல் 2019-ல்** வெளியேறும் **தொழில்துறை பட்டதாரிகளுக்கு தொழிற்பயிற்சி வாய்ப்புகளை வழங்குவதற்காக தேசிய இலைஞர் ஊக்குவிப்பு திட்டத்தின் கீழ்** உயர் கல்வி பயின்ற **இளைஞர்களுக்கு** திறன் வளர்ப்பு பயிற்சிக்கான **ஷிரியாஸ் (SHREYAS – Schemes for Higher Education Youth in Apprenticeship and Skills).** என்ற திட்டத்தை மத்திய **மனிதவளத் துறை அமைச்கம்** தொடங்கியுள்ளது.
- **இமாச்சலப் பிரதேசத்தின்** உணவு சேகரிக்கும் முறைக்கு ஊக்கமளித்து, உணவு வீணாவதை தடுப்பதற்காக, அம்மாநிலத்தின் **முதல் மெகா உணவுப் பூங்காவானது "உனா மாவட்டதில்"** அமையவுள்ளது.
- இமாச்சலப் பிரதேசத்தின் **குளிர்கால தலைநகர் - தர்மசாலா** மற்றும் **கோடைக்காலம் தலைநகர் - சிம்லா.**

- உலக சுகாதார அமைப்பு (WHO) **4வது உலகளாவிய மருத்துவ உபகரணங்கள்** மீதான “**மருத்துவ உபகரணங்களின் அணுகலை அதிகரித்தல்**“ என்ற கருத்தரங்கமானது ஆந்திர பிரதேசத்தின் விசாகப்பட்டினத்தில் நடைபெற்றது.
- இந்த WHO வின் . உலகளாவிய மருத்துவ உபகரணங்கள் மீதான கருத்தரங்கமானது **முதன் முறையாக இந்தியாவில்** நடைபெற்றது
- இந்திய விமானப்படையின் தகவல் தொடர்புக்காக, **இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் தாயரித்த** GSAT–7A **என்ற செயற்கைகோள்** GSLV - F11 **ராக்கெட்** மூலம், ஆந்திர மாநிலம் ஸ்ரீஹறிகோட்டாவில் உள்ள **2வது ஏவுகளத்தில் டிசம்பர் 19 அன்று** வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது.
    - 2250 எடை கொண்ட ஜிசார்ட் 7ஏ செயற்கைகோள் மூலம் விமானப்படைக்கு தேவையான தகவல்களை பெற முடியும.
- **முலுகு மற்றும் நாராயண்பாத்** என்ற இரு புதிய மாவட்டங்களை **தெலுங்கானா வருவாய் துறை** உருவாக்கியுள்ளது. இதன் மூலம் தெலுங்கானா **மாநிலத்தில் உள்ள மொத்த மாவட்டங்களின் எண்ணிக்கை 33.**
- தொழிலாளர்களின் பணியிட பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான **“சர்வதேச பூஜ்ஜிய நோக்கு மாநாடு”** (International Vision Zero Conference) மும்பையில் நடைப்பெற்றது.
    - இம்மாநாட்டை இந்தியாவின் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம் மற்றும் ஜெர்மனியைச் சேர்ந்த சமூக விபத்து காப்பீடு அமைப்பு ஆகியவை இணைந்து நடத்தியுள்ளது.
- **தொடக்கக் கல்வி ஆசியா** (2019) மாநாடானது **ஜெய்ப்பூரில்** (இராஜஸ்தான்) 2 நாட்கள் நடைப்பெற்றது.
    - இந்த நிகழ்ச்சியானது கல்வி தொடர்பான **ஆராய்ச்சி, குழந்தைகளின் தொடக்க நிலைக் கல்வியின் மேம்பாட்டிற்கான கல்வி மற்றும் கொள்கைகள்** ஆகியவற்றின் மீது கவனத்தைச் செலுத்துகிறது.
    - **“நமது குழந்தைகள், நமது எதிர்காலம்”** என்பது இந்த நிகழ்ச்சியின் குறிக்கோளாகும்.

- **மன்னார் வளைகுடா** பகுதியில் **கடல்பசுக்களை பாதுகாப்பதற்காக “கடற்புற்கள் வளர்ப்பு திட்டம்”** என்ற திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.
- குறிப்பு:
  - மன்னார் வளைகுடாவானது 2001 **ஆம் ஆண்டில் யுனோஸ்கோவால் உயிர் கோள பாதுகாக்கப்பட்ட இடம்** என அறிவிக்கப்பட்டது.
  - **தாவரவியலாளர்களின் சொர்க்கம்** என மன்னார் வளைகுடா அழைப்பது குறிப்பிடத்தக்கது.
- **பொருளாதாரத்தின் பின்தங்கிய இளைஞர்களுக்காக 100 நாட்கள் வேலைவாய்ப்பு வழங்குவதற்காக, மத்திய பிரதேச** மாநில அரசானது **“முக்கிய மந்திரி யுவ ஸ்வாபியின் யோஜனா” (Mukiyamantiri Yuva Swabiman Yojana)** என்ற திட்டத்தை தொடங்கியுள்ளது.
  - பொருளாதாரத்தில் பின்தங்கிய இளைஞர்களுக்காக 100 நாட்கள் வேலைவாய்ப்பு மூலம் 13,500 **ரூபாய் பெற முடியும்.**
- ஆசியாவின் மிகப்பெரிய விமானக் கண்காட்சியான **“ஏரோ இந்தியா-2019”** பெங்களூரில் நடைபெற்றது. இந்த கண்காட்சியில் **பாதுகாப்பு தளவாட உற்பத்தி நிறுவனமான லாக்ஹீடு மார்ட்டின்** (அமெரிக்கா) **F–21** என்ற பல பணிகள் மேற்கொள்ளும் போர் விமானத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
  - இந்த போர் விமானம் **“இந்தியாவில் தயாரிப்போம்“** என்ற திட்டத்தின் கீழ் தயாரிக்கப்படவுள்ளது.
- **ஆம்புலன்ஸ் வாகனங்கள் செல்ல முடியாத ஆறுகள்** சூழ்ந்த பகுதியில் **“படகு ஆம்புலன்ஸ்“** சேவையை ஒடிசா தொடங்கியுள்ளது.
  - இச்சேவையின் முதல் படகானது **”நம்பிக்கை வாகனம்”** என்ற பெயரில் கேந்த்ரபரா மாவட்டத்தின் பாடிஹார் என்ற இடத்தில் தொடங்கப்பட்டுள்ளது.
- சுதந்திரத்திற்கு பிறகு நடைபெற்ற போர் மற்றும் அமைதி காக்கும் நடவடிக்கையில் **உயிர் நீத்த இராணுவ வீரர்களின் நினைவாக புதுடெல்லியில் உள்ள இந்தியா கேட் அருகில் “ தேசிய போர் நினைவிடத்தை”** பிரதமர் நாட்டிற்கு அர்ப்பணித்திள்ளார்.
  - இந்நினைவகத்தில் பரம்வீர் சக்ரா விருது பெற்ற 21 **வீரர்களின் சிலைகள்** இடம் பெற்றுள்ளன. முதன் முதலில் **பரம்வீர்**

**சக்ரா விருது** பெற்ற முதல் இந்திய இராணுவ வீரர் **"சோம்நாத் சர்மா"** என்பவர் ஆவார்.

- குறிப்பு :
    - 1971 ல் நடைபெற்ற இந்தியா–பாகிஸ்தான் போரில் இறந்த இராணுவ வீரர்களின் நினைவாக **"அமர்ஜவான் ஜோதி"** என்ற கட்டடம் புது டெல்லியில் கட்டப்பட்டது குறிப்பிடத்தக்கது.
- உலகளவில் பொது சுகாதார பிரச்சனையாக உள்ள வைரஸ் **ஹெபடைடிஸ் நோயை இந்தியாவில் ஒழிப்பதற்கான தேசிய அளவிலான செயல் திட்டத்தை (National Action Plan – Viral Hepatitis)** மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை இணை அமைச்சர் **அஸ்வினி குமார் சௌபே** மும்பையில் தொடங்கியுள்ளார் .
    - இந்த செயல்திட்டம் **ஹெபடைடிஸின் விழிப்புணர்வு நல்லெண்ண தூதராக** உள்ள **அமிதாப்பச்சன்** முன்னிலையில் தொடங்கப்பட்டுள்ளது.
    - நோக்கம் : "2030 க்குள் ஹெபடைடிஸ் நோயை ஒழித்தல்".
- **அரசு துறைகள் விரைவாக செயல்படுவதை உறுதிபடுத்தி**, அதன் பணிகளில் வெளிப்படை தன்மையை அதிகரிப்பதற்காக, **உத்திரகாண்ட் மாநில அரசானது பொது புகாரை மக்கள் அளிப்பதற்காக "1905"** என்ற உதவி எண்ணை தொடங்கியுள்ளது.
    - இத்திட்டதின் கீழ் பொது மக்கள் எந்த ஒரு துறையையும் எளிதாக தொடர்பு கொள்ள முடியும்.
- **ஆசியாவின் மிகப்பெரிய உயிரியல் மற்றும் உயிரி தொழில்நுட்ப மன்றத்தின் 16வது பதிப்பான "பயோ ஆசியா-2019" (BioAsia -2019) தெலுங்கானா ஹைதராபாத்** நகரில் நடைபெற்றது.
    - இம்மன்றத்தினை தெலுங்கானா ஆளுநர் **ஈ.எஸ்.எல்.நரசிம்மன்** தொடங்கி வைத்தார் .
- இம்மாநாட்டின் கருத்துரு: **"வாழ்க்கை அறிவியல் 4.0 இடையூறுகளை சீர்குலைத்தல்" ('Life Science 4.0 - Disrupt the Disruption")** என்பதாகும்.

- **இந்தியாவில் உள்ள கிராமபுறங்களில் மிக அதிக அளவிலான இணைய இணைப்புடன் கூடிய** அறிதிறன் பேசிகள் பயன்பாட்டில் **தமிழகமானது 2வது இடத்தில்** உள்ளதாக மத்திய தகவல் தொடர்புதுறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.
    - முதலிடத்தில் **ஹிமாச்சல பிரதேசம்** உள்ளது.
- **106 வது இந்திய அறிவியல் மாநாடு**, பஞ்சாப் மாநிலத்தின் **ஜலந்தர் நகரில்** நடைபெற உள்ளது.
    - இம்மாநாட்டின் மையக் கருத்து- **"எதிர்கால இந்தியாவின் அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்"**
- 105வது இந்திய அறிவியல் மாநாடு மணிப்பூரில் நடைபெற்றது.
- இந்தியாவின் **முதல் விமானம் தாங்கிய போர் கப்பலான "INS VIRAT"** கடற்படையில் **இருந்து ஒய்வு பெற்றதை அடுத்து**, அந்த போர்க்கப்பலை அருங்காட்சியமாக மாற்ற கொள்கை அளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டது.
- **ஹைதராபாத்தில்** உள்ள பெண்களின் பாதுகாப்பிற்காக **"Women on Wheels"** என்னும் போலிஸ் பிரிவை அம்மாநில அரசு தொடங்கியுள்ளது.
- 2020ஆம் ஆண்டு முதல் புதிய பொறியியல் கல்லூரிகளை அமைப்பதை தடுக்க **B.V.R. மோகன் ரெட்டி** (IIT- **ஹைதராபாத்தின் தலைவர்**) என்பவரின் தலைமையில் குழு ஒன்றை மத்திய அரசு அமைத்துள்ளது.
- இந்தியாவின் மிக நீண்ட ஒற்றை பாதை கேபிள் பாலமான (India's Longest Single Lane Steel Cable Suspension Bridge) **பியொருங் பாலமானது (BYORUNG- BRIDGE) அருணாச்சல பிரதேசத்தின் சியாங் நதியின்** குறுக்கே கட்டப்பட்டு அம்மாநில முதல்வர் **பீமா காண்டு-வால்** திறந்து வைக்கப்பட்டது.
- **உலக வங்கி வெளியிட்டுள்ள தொழில் தொடங்குவதற்கு உகந்த நாடுகளின்** தரவரிசைப் பட்டியலில் (2019) **இந்தியாவானது 23 இடங்கள்** முன்னேறி **உலகளவில் 77வது இடத்தில்** உள்ளது.
- கடந்த ஆண்டு இந்தியா 100வது இடத்தில் இருந்தது குறிப்பிடத்தக்கது.

- மனிதனை விண்ணிற்கு செலுத்தும் இஸ்ரோவின் "**ககன்யான் திட்ட**" செயல்பாட்டின் ஒரு பகுதியாக, மனித விண்வெளி விமான மையம் **(Human Space Flight Centre ) பெங்களூரில் இஸ்ரோ** அமைத்திள்ளது.
  - தலைவர் -உன்னி கிருஷ்னன் நாயர் ( Unni krishnan Nair )
  - 2021 ஆம் டிசம்பர் மாதத்தில் ஒரு பெண் வீரங்கனை விண்வெளிக்கு அனுப்ப இஸ்ரோ திட்டமிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.
- 10 வது "**உலக தமிழ் ஆராய்ச்சி மாநாடானது**", அமெரிக்காவின் **சிகாகோ** நகரில் ஜுலை 4, 2019 அன்று நடைபெறவுள்ளது.
  - முதல் "உலக தமிழ் ஆராய்ச்சி மாநாடு" மலேசியாவின் கோலாலம்பூரில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.
- **உள்நாட்டு விமானப் போக்குவரத்து** அமைச்சகமானது, UDAN- 3 திட்டத்தின் கீழ் **அந்தமான் தீவுகளில் கடலில் தரையிறங்கும் விமானங்களை இயக்க அனுமதியளித்துள்ளது.**
  - இதன் மூலம் கடலில் தரையிறங்கும் விமானங்களை இயக்கும் முதல் இந்திய தீவாக அந்தமான் மாறியுள்ளது.
- டெல்லியில் CBI இடைக்கால இயக்குநராக **நாகேஸ்வர ராவ் (Nageshwara Rao)** நியமிக்கப்பட்டுள்ளார்.
- பொருளாதாரத்தில் நலிந்த பொதுப்பிரிவினருக்கு கல்வி, வேலைவாய்ப்பில் 10% இட ஒதுக்கீட்டை வழங்கிய **இரண்டாவது மாநிலமாக ஜார்கண்ட் உருவெடுத்துள்ளது.**
  - **மூன்றாவது மாநிலம் - உத்திரப்பிரதேசம்**
  - **முதல் மாநிலம் - குஜராத்**
  - 10% இட ஒதுக்கீட்டிற்கான அரசியல் சட்ட திருத்தம்–103
  - 10% இட ஒதுக்கீட்டிற்கான அரசியலமைப்பு சட்ட திருத்த மசோதா–124.
- **நேதாஜி சுபாஷ் சந்திர போஸ்** அவர்களின் **122 வது பிறந்தநாள் விழாவை (ஜனவரி 23, 2019)** நினைவு கூறும் வகையில் **செங்கோட்டையில் (புது டெல்லி) சுபாஷ் சந்திர போஸ் அருங்காட்சியகத்தை** இந்திய பிரதமர் திறந்து வைத்துள்ளார்.
- இந்தியாவில் உள்ள சமயம் சார்ந்த பகுதிகளுக்கு அரசு நிதியளிக்கும் சுற்றுலா திட்டமான "**பிரவசி தீர்த்த தர்சன் யோஜனா**" என்ற திட்டத்தை இந்திய பிரதமர் புது டெல்லியில் திறந்து வைத்துள்ளார்

- இதற்கான வயது வரம்பு 45 முதல் 65 வயது ஆகும்.

➢ 70வது இந்திய குடியரசு தினம்
- 1950 ஜனவரி 26 அன்று இந்திய அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்ததை நினைவு படுத்தும் விதமாக ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 26 ல், இந்திய குடியரசு தினம் கொண்டாடப்படுகிறது.
- 2019 வருடம் 70வது குடியரசு தினமாகும்.
- கருப்பொருள்: **காந்தியடிகளின் 150வது பிறந்த ஆண்டு என்பதால் அவரது கொள்கைகள் மற்றும் வாழ்க்கையை** கருப்பொருளாக கொண்டு விழா நடைபெற்றது.
- இதில் தென்னாப் பிரிக்கா அதிபர் சிரில் ரமாபோசா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

➢ என்சின் இல்லாமல் இயங்கும் இந்தியாவின் முதல் அதிவேக இரயிலான, **இரயில் 18 எக்ஸ்பிரஸின் பெயர் "வந்தே பாரத் எக்ஸ்பிரஸ்"** என மாற்றம் செய்யப்பட்டுள்ளது.
- இந்த இரயிலானது **டெல்லி - வாரணாசி** இடையே இயக்கப்படுகிறது. இதன் வேகம் **180 kmph.**

➢ **பாதுகாப்பு அமைச்சகமானது 70வது குடியரசு தினத்தில் "RDP இந்தியா–2019"** எனும் **கைபேசி செயலியை** தொடங்கியுள்ளது. இந்த செயலியை பயன்படுத்தி இந்த ஆண்டு ராஜபாதையில் நடைபெற்ற குடியரசு தின விழா அணிவகுப்பின் சிறப்பம்சங்களை காண முடியும்.
- இந்த முன்முயற்சி அரசின் " டிஜிட்டல் இந்தியா" பிரச்சாரத்துடன் ஒத்திசைந்துள்ளது

➢ இந்தியாவிற்கு அருகில் உள்ள நாடான **பாகிஸ்தான்** சமீபத்தில் **கரும்புச் சாற்றை (Sugarcane Juice)** "தேசிய பானமாக" (National Drink) அறிவித்துள்ளது.

➢ **குழந்தைகள் இறப்பு விகிதத்தை குறைக்கும் வகையில் அரசு மருத்துவமனை மற்றும் சுகாதார நிலையங்களில்** பிறக்கும் குழந்தைகளுக்கு **"பரிசு பெட்டகம்"** வழங்கும் திட்டத்தை மகாராஷ்ட்ரா மாநில அரசு தொடங்கியுள்ளது.

- **நாடு முழுவதும்** அவசர உதவிக்கு **ஒரே எண்ணை அழைக்கும்** திட்டத்தின் கீழ் மத்திய அரசானது **“112” இந்தியா என்ற செயலியை** அறிமுகப்படுத்தியுள்ளது .
    - இச்செயலில் ஷெளட் (சத்தமிடுதல்) என்னும் புதிய சிறப்பம்சம் பெண்களின் பாதுகாப்புக்காக அமைக்கப்பட்டுள்ளதாக உள்துறை அமைச்சர் இராஜ்நாத்சிங் அறிவித்துள்ளார்.
- **அசாம்** மற்றும் **அருணாச்சல பிரதேசத்தின்** கிழக்கு பகுதியில் உள்ள **பிரம்மபுத்திராவின் வடக்கு** மற்றும் **தெற்கு கரையோரங்களை இணைக்கும் இந்தியாவின் மிக நீண்ட இரயில்பாதை பாலமான போகிபல் பாலத்தை**, பிரதமர் **நரேந்திர மோடி டிசம்பர் 25-ஆம் தேதி** திறந்து வைக்க உள்ளார்.
    - அருணாச்சல பிரதேச எல்லையில் உள்ள தண்டவாளங்களை மேம்படுத்த இந்தியா திட்டமிடப்பட்டுள்ள உள்கட்டமைப்பு திட்டங்களில் போகிபல் பாலம் உள்ளது குறிப்பிடத்தக்கது.
    - பாலத்தின் நீளம் 4.94 கி.மீ ஆகும்.
- **தோப்பூரில்** (மதுரை) **ரூ.1264 கோடி செலவில் எய்ம்ஸ்** மருத்துவமனைக்கான அடிக்கல் நாட்டு விழா இன்று நடைபெறுகிறது. இதில் **பிரதமர் நரேந்திர மோடி** கலந்து கொண்டார்.
    - இம்மருத்துவமனையில் 750 படுக்கை வசதி, எம்.பி.பி.எஸ் (M.B.B.S) கல்வி இடங்கள் உள்பட பல்வேறு வசதிகள் வழங்கப்படுகிறது.
- **மொழிகள் மற்றும் பண்பாடுகள் அழிவதை தடுப்பதற்கான உலகளாவிய கருத்தரங்கம்** பிரான்ஸ் நாட்டின் **யுனெஸ்கோ அரங்கில்** நடைபெற்றது.
    - இக்கருத்தரங்கில், ஐக்கிய நாடுகள் பொதுசபையானது 2019 ஆம் ஆண்டினை” உள்நாட்டு மொழி ஆண்டாக (International Year of Indigenous Language) அறிவித்துள்ளது.
- இந்தியா உள்ளிட்ட 19 நாடுகள் பங்குபெற்ற **G-20 உச்சி மாநாடு** அர்ஜென்டினா தலைநகர் **பியூனஸ் அயர்ஸில்** நடைபெற்றது. இம்மாநாட்டில் பொருளாதாரக் குற்றவாளிகளுக்கு எதிராக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இந்தியா சார்பில் பிரதமர் நரேந்திரமோடி 9 அம்ச கோரிக்கைகளை முன்வைத்துள்ளார்.

- அதில், பொருளாதாரக் குற்றவாளிகளைக் கைது செய்வதற்காக ஒரு தனிப்படை, Financial Action Task Force என்ற பெயரில் அமைக்கப்பட வேண்டும்.

➢ 2019 ஆம் ஆண்டு **ஜனவரி மாதம் 1 ஆம் தேதி** முதல் கிம்பர்லி செயல்முறையின் (Kimberly process) தலைமை பதவிக்கு **இந்தியா தேர்வு** செய்யப்பட்டுள்ளது.

➢ **வைர வினியோக சங்கிலியில் உள்ள முரண்களை அகற்றுவதற்கான உலகளாவிய முன்முயற்சி ”கிம்பர்லி செயல்முறை”** ஆகும்.

➢ இந்தியாவிற்குள் சர்வதேச முதலீடுகளை அதிகளவில் ஈர்ப்பதை நோக்கமாகக் கொண்ட **“ஸ்டார்ட் அப் இந்தியா துணிகர மூலதன உச்சி மாநாடு 2018**- ஆனது கோவாவில் நடைபெற்றது. (Global Venture Capital Summit-2018).

- இந்த மாநாட்டின் கருத்துரு- **”இந்தியாவில் புத்தாக்கத்தை ஏற்படுத்துவதற்கான உலக முதலீடுகளை திரட்டுதல்”** என்பதாகும்.

➢ ஆளில்லா வான்வழி வாகனங்கள் தயாரிப்பதற்கான **இந்தியாவின் முதல் தனியார் துறை அலகு** (UAV- Unmanned Aerial Vehicles) தெலுங்கானா மாநிலத்தின் தலைநகரான **ஹைதராபாத்தில்** அமைக்கப்பட்டுள்ளது.

➢ தேசிய தலைநகரப் பகுதியான, **தில்லியின் சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக**, இந்திய இரயில்வேயின் **தேசிய இரயில் அருங்காட்சியகமானது.** தில்லியின் மேடம் துசாட்ஸ் மெழுகு அருங்காட்சியத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ள்து.

- இந்தியாவின் முதலாவது மெழுகு அருங்காட்சியகம் மேடம் துசாட்ஸ் அருங்காட்சியகமாகும்.

➢ தென் கிழக்கு வங்கக் கடலில் நிலை கொண்டிருந்த ஆழ்ந்த காற்றுழுத்த தாழ்வு மண்டலம் புயலாக வலுவடைந்துள்ளது. இந்தப் புயலுக்கு **”பெய்ட்டி”** என **தாய்லாந்து** நாடு பெயர் சூட்டியுள்ளது.

➢ நீதிமன்றங்களில் பண பரிவர்தனைகளுக்கான வெளிப்படைத் தன்மையை ஏற்படுத்தும் நோக்கில், **புனே மாவட்ட நீதிமன்றமானது**, **நீதிமன்ற கட்டணம்**, **நீதிபதி வைப்பு**,

**அபராதங்கள்** ஆகியவற்றை **"மின் கட்டணம்"** (E-Payment) மூலம் செலுத்தும் முறையை, இந்தியாவில் **முதல் நீதிமன்றமாக** செயல்படுத்தியுள்ளது.

- இந்திய சர்வதேச தோல் கண்காட்சி 2020 பிப்ரவரி நடைபெற்ற இடம்- சென்னை.
- உலகிலேயே மிக மோசமான **போக்குவரத்து நெரிசல் மிக்க நகரம் பெங்களூர்.**
- இந்தியாவில் முதல் கொரோனா வைரஸ் தாக்குதல் **கேரளம் திருச்சூர்** மாவட்டம்.
- உலகின் மிக பெரிய தியான மையம் **கான் ஷாந்தி வனம் (Hyderabad Telangana).**
- **2019 அதிக டிஜிட்டல் பணம் பரிமாற்றம்** நடைபெற்ற **இந்திய நகரம் பெங்களூர்.**
- **RAISE 2020 – RESPONSIBLE ARTIFICIAL INTELLIGENCE (AI)** இந்திய அரசின் முதல் செயற்கை நுண்ணறிவு மாநாடு நடைபெற்ற இடம் புது டெல்லி.
- TREDS—TRADE RECEIVABLES ELECTRONIC DISCOUNT SYSTEM.
- புதிய கடலோர காவல் ரோந்து கப்பல் - VAJRA.
- "SANTUSHT" Mobile app ESIC – EMPLOYEES STATE INSURANCE CORPORATION பணியாளர்களுக்கு அந்நிறுவனம் வெளியிட்டது.
- ICMR- INDIAN COUNCIL OF MEDICAL RESEARCH தற்போதைய செயலர் மற்றும் இயக்குநர் ஜென்ரல் -- பல்ராம் பார்கவா.
- **Madhya Pradesh CM - சிவ்ராஜ் சிங் சவுகான்.**
- **"Laser Guns"** மின்சாரத்தால் இயங்கும் கருவியை பயன்படுத்தும் **இந்தியாவின் முதல் காவல்துறை–குஜராத் காவல்துறை.**
- "PAL-V" (PERSONAL AIR LAND VEHICLE) குஜராத் மற்றும் டச் நாடுகள் பறக்கும் கார் உற்பத்தி தொழிற்சாலை ஒப்பந்தம்.
- **"BS – VI" Bharath Stage VI** ரக எரிபொருள் இந்தியா முழுவதும் அறிமுகப்படுத்திய நிறுவனம் **IOC – INDIAN OIL CORPORATION.**
- **V.K.PAUL COMMITTEE** - 21 நபர் உறுப்பினர் கொண்ட அமைப்பு கொரோனா நோய் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டிற்காக அரசிற்கு வழிகாட்டும் அமைப்பு.

- TRIFED: TRIBAL COOPERATIVE MARKETTING DEVELOPMENT FEDERATION OF INDIA.
- UN'S WORLD HAPPINESS REPORT 2020 இந்தியா 144 வது இடம்.
- "OPERATION NAMASTE" இந்திய இராணுவத்தினருக்கு கொரோனா நோய் தொற்றிலிருந்து பாதுகாப்பதற்கான செயல்திட்டம்.
- இந்தியாவின் மிக பெரிய கொரோனா நோய் சிகிச்சைகாக 1000 படுக்கை கொண்ட மருத்துவமணை உள்ள மாநிலம் ஒடிசா.
- 2019 இல் உடல் உறுப்பு தானத்தில் முதல் 3 இடம்
    1. மகாராஸ்ட்ரா
    2. தெலுங்கானா
    3. தமிழ்நாடு.
- "Nsafe" என்ற பெயரில் மறுபடியும் பயன்படுத்தக்கூடிய நுண்ணுயிர்க் கொல்லி மாஸ்க்கை (Antimicrobial Mask) ஐ,ஐ,டி டெல்லி ஆராய்ச்சி குழுவினர் கண்டு பிடித்துள்ளனர்.
- "பிரவாசி ராகத் மித்ரா "(Pravasi Raahat Mitra) என்ற பெயரில் தமது மாநிலத்திலிருந்து பல்வேறு மாநிலங்களில் புலம் பெயர் தொழிலாளர்களாக பணியாற்றும் தொழிலாளர்களுக்கு அரசின் திட்டங்களைச் சென்றடைய செய்வதற்கான மொபைல் செயலியை உத்திர பிரதேச மாநில அரசு வெளிட்டுள்ளது.
- காஷ்மீர் குங்குமப்பூ(Kashmir Saffron)விற்கு புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது.
- மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் அதிக அளவு வேலைவாய்ப்புகளை வழங்கி சிறப்பாக செயல்படுத்திய முதல் மாநிலம் சட்டிஷ்கர்.
- "நமது நாட்டை தெறிந்து கொள்ளுங்கள்" என்ற பெயரில் 15 வது இணையதள காட்சித் தொடரை "பஞ்சாப் கையேட்டுக்கு அப்பால்' என்ற பெயரில் சுற்றுலா அமைச்சகம் அமைத்துள்ளது.
- GARUD- Government Authorization for Relief Using Drones.
- CAMPP - Comprehensive Monitoring of Agriculture, Price and Procurement.
- ஆயுர்வேத மருந்தான அஷ்வகந்தாவை கரோனா நோய் தொற்றுக்கான தடுப்பு மருந்தாக பயன்படுத்துவதற்கான சோதனை முயற்சியை மத்திய அரசு மேற்கொள்ளவுள்ளது.

- 2020 ஆம் ஆண்டிற்கான பணக்கார இந்தியர்களில் முதலிடத்தில் முக்கேஷ் அம்பானி உள்ளார்.
- ஆயூஷ்மான் பாரத் திட்டத்தை பயனடைந்த ஒரு கோடியாவது நபர் - பூஜா தாபா.(மேகாலயா)
- மே மாதம் 2020 வங்கக் கடலில் உருவான புயல் - அம்பான் புயல்
- வட இந்தியப் பெருங்கடலில் உருவாகும் புயல்களுக்கு பெயர் வைக்கும்முறை உருவானா ஆண்டு- 2000 ஆம் ஆண்டு.
- உலக ஆற்றல் மாறுநிலை பட்டியல் 2020 இந்தியா - 74 வது இடம்.
- GOAL - Going Online As Leaders Programme மலை வாழ் இளைஞர்களின் டிஜிட்டல் திறன் மேம்பாட்டு திட்டம்.
- மத்திய சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் துறை அமைச்சகம் சாம்பியன்ஸ் (www.champions.gov.in) இணயதளத்தைத் தொடங்கியுள்ளது.

## <u>தமிழ்நாடு</u>:

- அரசு மருத்துவமனையில் **டிரான்ஸ் - கேத்தெடர் பெருமனித் தடுப்பிதழ்** உட்பொருத்துதலை **(TAVI- Transcatheter Aortic Valve Implantation)** அறிமுகப்படுத்திய நாட்டின் **முதலாவது மாநிலம் தமிழ்நாடு** ஆகும்.
- **சென்னை மத்திய இரயில் நிலையத்திற்கு** தமிழ்நாட்டின் **முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி. இரமச்சந்திரன்** பெயர் சூட்டப்பட உள்ளது என்று இந்தியப் பிரதமர் **மார்ச் 06** அன்று அறிவித்துள்ளார்.
- **மார்ச்-06** அன்று தமிழக முதலமைச்சர் "**அம்மா சமுதாய வானொலியைத்**" தொடங்கினார்.
- இந்தியாவின் பெண்களுக்கான அதிகபட்ச குடிமையியல் **விருதான "நாரிசக்தி விருதுகள்" 2018ல் 44 விருதுகள்** வழங்கப்பட்டுள்ளது.
    - **பேடி பச்சாவோ பேடி பதாவோ திட்டத்தின்** கீழ் குழந்தை பிறப்பு சமயத்தில் குழந்தை பாலின விகிதத்தை அதிகரிப்பதில் மேன்மையான வளர்ச்சி அடைந்ததற்காக தமிழக சமூகநலம் மற்றும் சத்துணவுத் துறையானது நாரி சக்தி விருது பெற்றுள்ளது.
- **சென்னையில்** உள்ள இந்திய தொழில்நுட்ப நிறுவனத்தைச் (IIT-MADRAS) சேர்ந்த் ஆராய்ச்சியாளர்கள், **உப்பு நீரை சூரிய ஒளியின் மூலம் குடிநீராக மாற்றும் முதலாவது ஆலையை தமிழகத்தின் கன்னியாக்குமரியில்** அமைத்துள்ளனர்.
    - இத்திட்டத்திற்கு மத்திய புவி அறிவியல் அமைச்சகத்தினால் நிதியளிக்கப்படுகிறது.
- சென்னையில் நடைபெற்ற குடியரசு தின விழாவில் **"சிறந்த அணிவகுப்பில்" தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சகமானது முதல் பரிசினை** வென்றுள்ளது.
    - வேளாண் மற்றும் தோட்டக்கலை துறையானது 2 வது பரிசினையும் சுகாதாரத்துறை 3 வது பரிசினையும் பெற்றுள்ளது.

- தமிழ்நாட்டில் செயல்படும் **பல்லவன் - பாண்டியன் கிராம வங்கிகள் இணைக்கப்பட்டு "தமிழ்நாடு கிராம வங்கி"** என்ற பெயரில் புதிய வங்கி உருவாக்கப்பட்டுள்ளது.
    - இந்தியன் வங்கியின் கட்டுப்பாட்டின் கீழ், இந்தியன் வங்கியின் சார்பு வங்கியாக இயங்க உள்ளது.
    - தலைமையகம் சேலத்தில் உள்ளது.
- நாட்டில் **ஒட்டுமொத்தமாக சரக்கு மற்றும் சேவை வரி வசூலித்ததில் தமிழ்நாடு 4 ஆம் இடத்தை** பிடித்துள்ளது.
    - ஒட்டு மொத்தமாக ரூபாய் 70.792 கோடிகள் வரி **வசூலித்து மகாராஷ்ட்ரா மாநிலம் முதலிடத்தில்** உள்ளது. இதற்கு அடுத்த இடத்தில் **உத்திரப் பிரதேசம் மற்றும் கர்நாடகா ஆகிய மாநிலங்கள்** உள்ளன .
- தமிழகத்தின் **கூடுதல் தேர்தல் அதிகாரியாக எம். பாலாஜி மற்றும் வி. ராஜாராமன்** நியமிக்கப்பட்டுள்ளனர்.
- தமிழகத்தின் மாநில **தலைமைத் தேர்தல் அதிகாரி" சத்ய பிரத சாகு"** தமிழகத்தின் தலைமைத் **தேர்தல் ஆணையர் "மாலிக் பெரோஷ்கான்"**
- **நாகர்கோவில், ஓசூர் ஆகிய நகராட்சிகள் மாநகராட்சிகளாக தரம் உயர்த்தப்பட்டது.**
    - ஏற்கனவே தமிழ்நாட்டில் சென்னை, கோவை, திருச்சி, மதுரை, சேலம், தூத்துக்குடி, நெல்லை, திண்டுக்கல், திருப்பூர், ஈரோடு, வேலூர், ஓசூர், நாகர்கோவில், என மொத்த மாநகராட்சிகளின் எண்ணிக்கை 14 ஆக உயர்ந்துள்ளது.
- தமிழகத்தில் **சர்வதேச அளவிலான நவீன கால்நடைப் பூங்காவானது சேலம் மாவட்டம் தலைவாசலில் 900 ஏக்கர்** நிலப்பரப்பில் சுமார் 396 கோடி செலவில் அமையவுள்ளது.
    - இப்பூங்காவானது **நாட்டு இன கால்நடைகளின் அபிவிருத்திக்கும்** உதவும் வகையில் அமைக்கப்படவுள்ளது.
- முதல்வர் பழனிச்சாமியால் அறிவிக்கப்பட்ட **வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் ஏழை தொழிலாளர்களின் குடும்பத்திற்கு ரூ.2000 வழங்கும் திட்டத்துக்கான அரசாணை** பிறப்பித்துள்ளது.

- முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி தலைமையில் **நடந்த 2 வது உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் ரூ.3 லட்சத்து 431 கோடி முதலீட்டுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்** மேற்கொள்ளப்பட்டது.
  - இதில் கலந்து கொண்ட நிறுவனங்களுக்கு, அரசு சார்பில் வழிகாட்டுதல் கூட்டம் சென்னை கிண்டியில் நடந்தது.
  - ஒப்பந்தம் மேற்கொண்டவர்களில் 366 **தொழில் நிறுவனங்கள் உற்பத்தியை தொடங்கி** உள்ளன.
- **சென்னை சாந்தோம்** மாநகராட்சி பள்ளியில், தமிழ்நாட்டின் முதல் **"மாற்றுத் திறனாளிக்காக உணர்வு பூங்கா"** அமைக்கப்பட்டுள்ளது.
- **விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கணையருக்கு அரசு வேலைவாய்ப்பில் 3 சதவீதம் இடம் ஒதுக்கீடு** செய்ய தமிழக அரசானது அரசாணை பிறப்பித்துள்ளது.
- **சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டம் 1986 ன் கீழ்**, தமிழகத்தில் **ஜனவரி** 01 2019, **முதல் பிளாஸ்டிக் பொருட்களுக்கு தடை விதிக்கும் சட்டம்** நடைமுறைக்கு வந்துள்ளது.
  - இதற்கான அரசாணை ஜூன் 05 2018 ல் வெளியிடப்பட்டது. முதன் முதலில் பிளாஸ்டிக் பொருட்களுக்கு தடை விதித்த **மாநிலம் சிக்கிம்** ஆகும்.
- **சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம்** மாவட்டங்களில் உள்ள **குடிசைகளை மேம்படுத்த "வாழ்விட மேம்பாட்டு திட்டம்"** என்னும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
  - இத்திட்டமானது உலக வங்கியின் உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது.
- தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் வழங்கப்படும், **ஸ்வட்ச் சர்வேக்ஷன் விருதில் மாநில அளவில் திடக்கழிவு மேலாண்மையில் தமிழகம் முதலிடம்** பிடித்துள்ளது.
  - திடக்கழிவு **மேலாண்மையில் முதலிடம் பிடித்த மாநகராட்சி – ஹைதராபாத்** என்பது குறிப்பிடத்தக்கது.
- உலக வங்கி நிதி உதவியுடன், தமிழகத்தில் நீர், நில மேலாண்மை திட்டத்தை சிறப்பாக செயல்படுத்த **அமெரிக்க கர்னெல் பல்கலைக்கழகத்துடன் தமிழக அரசானது புரிந்துணர்வு ஒப்பந்தத்தில்** கையெழுத்திட்டுள்ளது.

- Beti bacho Beti Padhao (பெண் குழந்தைகளை பாதுகாப்போம் மற்றும் கற்பிப்போம்) என்ற திட்டத்தை **சிறப்பாக செயல்படுத்திய மாவட்டமாக திருவண்ணாமலை (தமிழகம்)** தேர்ந்தெடுக்கப்பட்டு விருது வழங்கப்பட்டுள்ளது.
    - **"பேட்டி பச்சோ பேட்டி பதோ" அறிமுகப்படுத்தப்பட்ட நாள் - 22 ஜனவரி 2015.**
- இந்தியாவில் முதன் முறையாக "DRONE" மூலம் வானில் பறக்கும் "ஏர் டாக்சி"யை (India's First Air Taxi, Drone Air taxi) **அண்ணா** பல்கலைக்கழகத்தை சேர்ந்த **"தக்ஷா மாணவர் குழு"** தயாரித்துள்ளது.
    - இந்த **"ஏர் ஆம்புலன்ஸ் " உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சையின் போது பயன்படுத்தப்படும்.**
- இந்தியாவிலேய முதன் முறையாக **தமிழகத்தில் அரசு பள்ளிகளில் எல்கேஜி, யுகேஜி வகுப்புகள்** தமிழக முதல்வரால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

    முதற் கட்டமாக சென்னை எழும்புரில் செயல்படும் மாநில மாதிரி மகளிர் மேல்நிலைப் பள்ளியில் எல்கேஜி, யுகேஜி வகுப்புகள் தொடங்கப்பட்டது.
- சென்னையில் உள்ள நந்தம்பாக்கத்தில் நடைபெற்ற தமிழக **அரசின் 2 வது உலக முதலீட்டாளர் மாநாட்டில் சுமார் 304 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள்** கையெழுத்திடப்பட்டுள்ளது.
    - இதன் மதிப்பு 3 **இலட்சத்து 431 கோடி ஆகும். இதன் பகுதியாக நாகப்பட்டினத்தில் 27000 கோடி முதலீட்டில் மிகப்பெரிய பெட்ரோலியம் சுத்திகரிப்பு மையம், சென்னை** பெட்ரோலியம் கார்பரேஷனால் அமைக்கப்பட உள்ளது.
- **12ஆம்** நூற்றாண்டைச் சேர்ந்த **விக்கிரம சோழன் ஆட்சிக் காலத்தில், பெண்ணை வடகரை மேற்கோவலூர் நாட்டு இலச்சிய முடையான் உழியன் மாதன்** என்பவர் சோழாந்தகப் பல்லவராயன் வடுகன் ஆளவந்தான் நினைவாக, அமைக்கப்பட்ட தூம்பானது, திருவண்ணாமலை அருகே **தெமுடியனூரில்** கண்டெடுக்கப்பட்டுள்ளது.

- நாட்டில் **பெண்களின் பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் வகையில்,** **"181"** என்ற இலவச தொலைபேசி எண் மத்திய அரசு அறிமுகம் செய்தது. இதனை **தற்போது தமிழக அரசானது**, பெண்கள் சார்ந்த வன்கொடுமைகளுக்கு தீர்வு காணும் வகையில், **"181" என்ற இலவச தொலைபேசி எண்ணை** அழைக்கும் வகையில் விரிவுபடித்தியுள்ளது.
- தமிழகதில் புதிதாக 2 அரசு மருத்துவமனை தொடங்கும் மாவட்டம் - **அரியலூர், கள்ளக்குறிச்சி.**
- டில்லியில் நடந்த குடியரசு தின அணிவகுப்பில் **கடலோர காவல் படைக்கு தலைமை ஏற்றவர்- தேவிகா** (Tamil Nadu Tharapuram).
- தமிழக அரசு சார்பில் நடைபெற்ற **குடியரசு தின விழாவில் சிறந்த அலங்கார ஊர்தி பரிசு பெற்ற அமைப்பு - காவல்துறை.**
- தமிழ் பல்கலைக்கழகத்தில் தமிழக அரசின் **1 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில்** ராபர்ட் கால்டுவெல் பெயரில் இருக்கை அமைய உள்ளது.
- **தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் - டி.ஜி.பி. சுனில்குமார்.**
- பா.சிவந்தி ஆதித்தனார் மணிமண்டபத்தை **தமிழக முதல்வர் திரு கே.எடப்பாடி பழனிச்சாமி திறந்து** வைத்தார். **(இடம் வீரபாண்டியன்பட்டினம் - தூத்துக்குடி).**
- தஞ்சாவூர் சாஸ்த்ரா நிகர்நிலைப் பல்கலைக்கழக பிரிட்டனில் I.E.T நிறுவனத்தின் உயர்நிலைத்தர அங்கீகாரம் பெற்றுள்ளது.
- **"என் காசு" (En kasu) INDIAS 1ST PREPAID WALLET CARD- KVB** வங்கி அறிமுகப்படுத்தியுள்ளது.
- தமிழ்நாட்டின் **38 வது மாவட்டம் மயிலாடுதுறை (நாகப்பட்டினத்தில் இருந்து பிரிக்கப்பட்டது).**
- தமிழ்நாட்டில் கிராமத்தில் பணியாற்றும் **அர்ச்சகர்களுக்கு மாத சம்பளம் ரூ,1000→ ரூ.3000 ஆக** உயர்த்தப்பட்டுள்ளது.
- துப்புரவு பணியாளர் → **தூய்மை பணியாளர்** என பெயர் மாற்றப்பட்டது.
- **1.2.2020 முதல் ஒரே நாடு ஒரே குடும்பம் அட்டை திட்டம் தமிழகத்தில் முதற்கட்டமாக - திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டத்தில் அமல்படுத்தப்பட்டது.**

- கோவில்பட்டி **கடலை மிட்டாய்க்கு புவிசார் குறியீடு** வழங்கப்பட்டுள்து
- சென்னை கொரோனா தடுப்பு சிறப்பு அதிகாரி - **ஜே. ராதாகிருஷ்ணன்** (வருவாய் நிர்வாக ஆணையர்).
- சி.ரங்கராஜன் குழு: கொரோனா நோய்த் தாக்குதலால் பாதிப்படைந்துள்ள தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு ஆலோசனை வழங்க அமைக்கப்பட்ட குழு.
- தமிழகத்தில் புதிய அரசுமருத்துவக் கல்லூரி அமைய உள்ள இடம் நல்லூர் கிராமம் திருப்பூர் மாவட்டம்.
- தஞ்சாவூர் நெட்டி வேலைப்பாடு, பெரம்பலூர் மாவட்ட அரும்பாவூர் மரச்சிற்பங்களுக்கு மத்திய அரசின் புவிசார் குறியீடுக்கான அங்கீகாரம் கிடைத்துள்ளது.
- மன்னார் வளைகுடாவில், கடல் நீரை குடிநீராக்கும் திட்டத்தை (60எம்எல்டி) செயல்படுத்த மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் அனுமதியளித்துள்ளது. இந்த திட்டமானது, ராமநாதபுரம் கடலாடி தாலுகாவில் உள்ள குதிரைமொழி கிராமத்தில் செயல்படுத்தப்படவுள்ளது.
- தோடர் பழங்குடியினர் கொண்டாடும் பண்டிகை "மொற் பர்த் பண்டிகை".
- காந்தியடிகள் காவலர் பதக்கங்கள் பெற்றவர்கள்:
  1. சந்திர மோகன்
  2. ராஜசேகரன்.
  3. பூங்கோதை
  4. அழகிரி
  5. பார்த்திபநாதன்.
- "ரோபோசெ.்.ப்": தானியங்கி முறையில் 800 வகையான உணவுகளைத் தயாரிக்கும் வகையில் உருவாக்கப்பட்ட தானியங்கி இயந்திரம் சுந்தரமூர்த்தி என்பவர் உருவாக்கியுள்ளார்.
- தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகம் சார்பில் தமிழாசிரியர்களுக்கு இலக்கிய இலக்கண மற்றும் பேச்சுத்தமிழ் குறித்த 10 நாள் பயிலரங்கம் தென்னாப்பிரிக்காவின் டர்பன் நகரில் நடைபெற்றது.
- 2019 ஆம் ஆண்டில் மாநில நீர் மேலாண்மை செயல்பாட்டில் தமிழகம் 13 வது இடம்.

## நடப்பு நிகழ்வுகள்

- தேசிய பசுமை தீர்பாயத்தின், திடக்கழிவு மேலாண்மைக்கான தமிழ்நாடு மாநில அளவிலான குழுவின் தலைவர் - ஒய்வு பெற்ற நீதிபதி P.ஜோதிமணி.
- நார்வே சர்வதேச திரைப்பட விழா 2020 சிறந்த படமாக தனுஷ் நடித்த அசுரன் படம் தேர்வாகியுள்ளது.
- எம்,ஜி,ஆர். இன் 103 வது பிறந்த நாள் விழா - 17 ஜனவரி 2020 ல் கொண்டடப்பட்டது.
- 5வது, அறிவியல் திரைப்பட திருவிழா 2020 ( Science Film Festival 2020 ) - கோவா பனாஜி நகரில் நடைபெற்றது ( ஜனவரி 15 - 18 2020 )
- சென்னை - அந்தமான் நிக்கோபார் இடையே கடலுக்கடியிலான ஒளி இழை கம்பி வட இணைப்பு திட்டம். தொடங்கப்பட்டது.
- 8-1-2020 அன்று தமிழக சட்டமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட 3 மசோதாக்கள்:
- தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் ( திருத்த ) மசோதா 2020
- தமிழ்நாடு மீன்வளர்ப்பு பல்கலைக்கழக ( திருத்த ) மசோதா 2020
- தமிழ்நாடு வேளாண்மை உற்பத்திப் பொருட்கள் சந்தைப்படுத்துதல் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) (திருத்த) மசோதா 2020.
- தமிழக அரசின் ஒய்வூதியதாரர்களுக்கு சிறப்பு அம்சங்களுடன் கூடிய புதிய காப்பீடு திட்டம் 2022 ஆம் ஆண்டு வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.
- 2019 ஜனவரி மாதம் நடைபெற்ற உலக முதலீட்டாலர்கள் மாநாட்டின் மூலமாக 10.5 லட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வகையில் ரூ.3 லட்சத்து 501 கோடி அளவிலான முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.
- தமிழகத்தில் பேட்டரி வாகனங்களுக்கு 256 மின்னேற்ற நிலையங்கள் அமைக்கப்படவுள்ளது என மத்திய அரசு அறிவித்துள்ளது.
- நிதி ஆயோக் நீடித்த நிலையான வளர்ச்சி இலக்குகள் - இந்தியா பட்டியல் 2.0 (Sustainable Development Goals - India 2.0) முதல் இலக்கான ‘வறுமை இல்லை ‘ (No Poverty) பட்டியலில் முதலிடம் ”தமிழ்நாடு”

## நியமனங்கள்:

- போலீஸ் அதிகாரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் உயரிய அமைப்பான “**போலீஸ் புகார்கள் ஆணையத்தின் (Police Complaints Authority)** தலைவராக ஒய்வு பெற்ற நீதிபதி **பி.எஸ்.தேஜி ( P.S Teji )** என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.
- தேசிய புத்தக அறக்கட்டளையின் புதிய தலைவராக **கோவிந்த் பிரசாத் சர்மா** நியமிக்கப்பட்டுள்ளார்.
- முன்னாள் நிதிச்செயலாளர் ,**அஜய் நாராயண் ஜா**( Ajay Narayan Jha) என்பவர் 15 வது நிதிகுழுவின் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.
    - ஏற்கனவே உறுப்பினராக இருந்த சக்திதாஸ் ரிசர்வ் வங்கியின் கவர்னராக நியமிக்கப்பட்டதை தொடர்ந்து “அஜய் நாராயண் ஜா” இப்பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.
- குறிப்பு:
    - அரசியலமைப்பு விதி 280 ன் படி குடியரசுத் தலைவர் நிதிக் குழுவை அமைக்கிறார்.
    - **15 வது நிதிக் குழுவின் தலைவர் -N.K சிங்**
    - **14 வது நிதிக் குழுவின் தலைவர் -Y.V ரெட்டி**
- **ஒடிசா மாநிலத்தின் லோக் ஆயுக்தா** அமைப்பின் முதல் தலைவராக, முன்னாள் உயர் நீதிமன்ற **தலைமை நீதிபதி ”அஜித் சிங்”** என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.
- குறிப்பு:
    - லோக் ஆயுக்தா மசோதாவை சட்ட பேரவையில் நிறைவேற்றிய **முதல் மாநிலம்- ஒடிசா**
    - லோக் ஆயுக்தா சட்டத்தை முதன் முறையாக நிறைவேற்றிய **மாநிலம்- மகாராஷ்ட்ரா.**
- லோக்பால் அமைப்பின் முதலாவது தலைவராக உச்ச நீதிமன்ற ஒய்வு பெற்ற நீதிபதி “**பினாகி சந்திர கோஷ்**“ நியமிக்கப்பட உள்ளார்.
    - நாட்டின் பிரதமர் உட்பட மத்திய மந்திரிகள் மற்றும் மத்திய அரசு அதிகாரிகள் மீதான ஊழல் புகாரை விசாரிக்க லோக்பால் அமைப்பை ஏற்படுத்துவதற்கான **மசோதா 2013 ல்** நிறைவேற்றப்பட்டது.

- தேசிய பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையத் தலைவராக **பகவான் லால் சஷினி** என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.
    - தேசிய பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையச் சட்டம் 1993 ன் கீழ் தேசிய பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையம் ஏற்படுத்தப்பட்டது.
    - இதற்கான **அரசியலமைப்பு சரத்து - 338B ஆகும்**.
    - தேசிய பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையத்திற்கு அரசியலமைப்பு அந்தஸ்து வழங்கிய சட்டதிருத்தம் - **102 வது சட்டத்திருத்தம்**
    - தேசிய பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையத்திற்கு அரசியலமைப்பு அந்தஸ்து வழங்கிய சட்டதிருத்த மசோதா - **123 வது சட்டத்திருத்த மசோதா.**
- **ஐ. நா வளர்ச்சி திட்டத்தின் (யு.என்.டி.பி)** நல்லெண்ண தூதராக **பத்மலட்சுமி** நியமிக்கப்பட்டுள்ளார்.
- பாகிஸ்தானில், சர்வதேச மகளிர் தினத்தையொட்டி, **இந்து தலித் சமூகத்தை சேர்ந்த கிருஷ்ணகுமாரி கோலி என்ற பெண்**, பாகிஸ்தான் நாடாளுமன்ற மேலவையின் **ஒரு நாள் தலைவராக** பணியாற்றியுள்ளார். இவர் பாகிஸ்தான் செனட் சபையில் தலைவர் ஆன முதல் இந்து தலித் பெண் ஆவார்.
- NMTMBS எனப்படும் **நகர்வுத்திறன் மற்றும் பேட்டரி சேமிப்பு மாற்றத்திற்கான தேசியத் திட்டம்** (National Mission on Transformative Mobility and Battery Storage), தலைவராக **"அமிதாப் காந்த்"** நியமிக்கப்பட்டுள்ளார்.
- இந்திய **நிதித்துறைச் செயலாளராக சுபாஷ் சந்திரா கர்க்** (Subash chandhra Garg) நியமிக்கப்பட்டுள்ளார்.
- சிவகங்கை மாவட்டத்தின் காரைக்ககுடியில் உள்ள அறிவியல் மற்றும் தொழிலக ஆய்வு மன்றம் - **மத்திய வேதியியல் ஆராய்ச்சி நிறுவனத்தின் (CSIR - CECRI /Central electro chemical research institute ) முதலாவது பெண் இயக்குநராக தமிழகத்தை சேர்ந்த டாக்டர் என். கலைச்செல்வி** நியமிக்கப்பட்டுள்ளார்
- **உலக சுகாதார அமைப்பின் தலைமை விஞ்ஞானியாக** (Chief Scientist of WHO) **டாக்டர் சௌமியா சுவாமிநாதன்** நியமிக்கப்பட்டுள்ளார்

- சௌமியா சுவாமிநாதன் தற்போது உலக சுகாதார அமைப்பின் துணை இயக்குநராக பணிபுரிகிறார்.

➢ **டாக்டர் ஏ.கே. மொகந்தி (Dr.A.K.Mohanthi)** என்பவர் **பாபா அணு ஆராய்ச்சி இயக்குநராக** பொறுப்பேற்றுள்ளார்.

- பாபா அணு ஆராய்ச்சி மையத்தின் தலைமையகம் மும்பையில் உள்ளது.

➢ **கோவாவின் புதிய முதலமைச்சராக "பிரமோத் சாவந்த்"** என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்

- இவர் **கோவா மாநிலத்தின் 13வது முதலமைச்சராக** பதவி ஏற்கிறார்.

➢ இந்திய தேர்தல் ஆணையமானது, வாக்களிப்பதின் அவசியம் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்ப்படுத்துவதற்காக **12 தேர்தல் நல்லெண்ண தூதுவர்களை** நியமித்துள்ளது.

➢ இதில் மாகாராஷ்டிராவின் திருநங்கை சமூக ஆர்வலர் " கௌரி சவன்ட் " முதல் திருநங்கையாக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

➢ திருநங்கைகளுக்கான வாக்களிக்கும் உரிமையானது 2014 ல் வழங்கப்பட்டது.

➢ **தமிழ்நாட்டின் தேர்தல் செலவினங்களின் சிறப்பு கண்காணிப்பாளராக முன்னாள் இந்திய வருவாய் பணி அதிகாரியான மது மகாஜன்** என்பவரை இந்திய தேர்தல் ஆணையம் நியமித்துள்ளது.

- இவர் வாக்காளர் புகார் எண் 1950 மற்றும் **சி-விஜில் செயலி** ஆகியவற்றின் மூலம் பெறப்படும் புகார்களின் மீது நடவடிக்கை எடுக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

➢ **இந்திய கடற்படையின் புதிய தலைமை தளபதியாக "கரம் பீர் சிங்"** என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார். தற்போதைய இந்திய கடற்படையின் தலைமை தளபதியான **"சுனில் லம்பா"** வரும் மே மாதத்தில் ஒய்வு பெறுவதை அடுத்து இவர் நியமிக்கப்பட உள்ளார்.

➢ குறிப்பு:

- "கரம் பீர் சிங்" தற்போது இந்திய கடற்படையின் துணை தளபதியாக உள்ளார்.
- இவர் **இந்திய கடற்படையின் 24 வது தலைமை தளபதியாக** பொறுப்பேற்க உள்ளார்.

- **இந்திய கடற்படையின் துணை தளபதியாக**, தேசிய பாதுகாப்பு கல்வி கழகத்தின் **தலைமை பொறுப்பாளராக உள்ள ஜி. அசோக் குமார்** என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.
- இந்தியாவின் **முதல் பெண் விமான பொறியாளராக ஹினா ஜெய்ஸ்வால் ( சண்டிகர் )** நியமிக்கப்பட்டுள்ளார்.
  - இவர் விமான பொறியாளராக **இந்திய விமானப்படையின் ஹெலிகாப்டர் செயல்பாட்டு பிரிவுகளில்** பணியாற்ற தேர்ந்த்தெடுக்கப்பட்டுள்ளார்.
- மத்திய அரசின் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரலாக (Additional Solicitor General-ASG) வழக்குரைஞர் **"மாதவி கோரதியா திவானை"** மத்திய அரசு நியமித்துள்ளது.
  - இவர் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரலாக பதவி வகிக்கும் **மூன்றாவது பெண்மணி ஆவார்**. ASG ஆக பதவிவகித்த முதல் பெண்மணி **"இந்திய ஜெய்சிங்"**ஆவார்.
- **இந்திய வானியல் சங்கத்தின் முதல் பெண் தலைவராக "G.C.அனுபாமா"** என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.
  - இந்திய வானியல் சங்கம் 1972 ல் வைணு பாப்பு என்பவரால் உருவாக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.
- **கயானா குடியரசு (Republic of Guyana) நாட்டிற்கான இந்திய உயர் ஆணையராக ஜே.ஜே.ஸ்ரீனிவாசா** என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.
- **மத்திய தகவல் ஆணையத்தின் புதிய தலைமை ஆணையராக "சுதிர் பார்கவா" நியமிக்கப்பட்டுள்ளார்.**
  - இவர் ஏற்கனவே இருந்த R.K மாத்தூர் ஒய்வு பெற்றதை அடுத்து நியமிக்கப்பட்டுள்ளார்.
  - பெக்சாஸ் (அமெரிக்கா) மாகாணத்தில் உள்ள போர்ட் பென்ட் மாவட்ட நீதிமன்றத்தின் நீதிபதியாக , இந்தியாவைச் சேர்ந்த 'கே.பி.ஜார்ஜ்' என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.
- **சர்வதேச நாணய நிதியத்தின் (IMF -International monetary fund)** பொருளாதார நிபுணராக **கீதா கோபிநாத்** என்பவர் நியமிக்கப்பட்டுள்ளார்.
  - **IMF உருவாக்கப்பட்ட ஆண்டு- 27 டிசம்பர் 1945**
  - **அதன் தலைமையகம் உள்ள இடம் - வாஷிங்டன்.**

- இந்திய உச்சநீதிமன்றத்தின் **புதிய நீதிபதியாக**, **தினேஷ் மகேஷ்வரி மற்றும் சஞ்சீவ் கன்னா** ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாய் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். தற்போது உள்ள உச்சநீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை 28 ஆக உயர்ந்துள்ளது.
- **உலக சுகாதார அமைப்பின்** (WHO) தென்கிழக்கு ஆசியாவின் பிராந்திய இயக்குநராக **"டாக்டர் பூனம் கெத்ரபால் சிங்"** (Poonam Khetra Pal Singh) நியமிக்கப்பட்டுள்ளார்.
    - உலக சுகாதார அமைப்பின் கிழக்கு ஆசியாவின் முதல் பெண் இயக்குநர் இவரே ஆவார்.
- **செபி அமைப்பின் ஊழல் கண்காணிப்புத் துறை தலைமை அதிகாரியாக (Chief Vigilance Officer - CVO) ஆர்த்தி சாப்ரா ஸ்ரீவஸ்தாவை பிரதமர்** அலுவலகம் நியமித்துள்ளது.
    - CVO பணியானது மத்திய அரசு பணியாளர்களின் ஊழல்களை கண்டறிவதற்காக பணியமர்த்தப்பட்ட **மத்திய ஊழல் கண்காணிப்பு துறையின் விரிவாக்கப்பட்ட பிரிவு** ஆகும்.
- இராஜஸ்தான் மாநில முதல்வராக "**அசோக் கெலாட்**" பதவி ஏற்றுக் கொண்டார். அசோக் கெலாட்டுக்கு ஆளுநர் கல்யாண்சிங் பதவி பிரமாணம் செய்து வைத்துள்ளார்.
- RBI நிதிக்கொள்கைக் குழு (Monetary Policy Committee) உறுப்பினர் - **E.D.ஜானக்ராஜ்**.
- அமெரிக்காவின் இந்திய தூதர் - **தரன்ஜித் சிங் சிந்து.**
- SBI மேலாண் இயக்குநர்–**செல்ல் ஸ்ரீநிவாசலு செட்டி.**
- உச்ச நீதிமன்றம் அமைத்துள்ள சாலை பாதுகாப்பு குழு தலைவர்– **அபய் மனோகர் சாப்ரே.**
- RBI 4$^{TH}$ துணை ஆளுநர்- **மைக்கேல் தேவப்ரதா பத்ரா.**
- SEBI— SECURITY EXCHANGE BOARD OF INDIA தலைவர் – **அஜய் தியாகி.**
- வெனிசுலா நாட்டின் இந்திய தூதர் – **அபிஷேக் சிங்.**
- பிரான்ஸ் நாட்டின் இந்திய தூதர் – **ஜாவத் அஸ்ரஃப்.**
- நேபாள் நாட்டின் இந்திய தூதர் – **வினய் மோகன் குவாத்ரா.**
- மத்திய தகவல் ஆணையத்தின் தலைமை ஆணையர்–**விமல் ஜூல்கா.**
- "WALMART INDIA" தலைமை செயல் அதிகாரி – **சமீர் அகர்வால்.**

- இந்தியாவின் கடலோர காவல் படையின் முதல் பெண் D.I.G (DEPUTY INSPECTOR GENERAL) **நுபுர் குல்ஷேத்ரா.**
- துருக்கி நாட்டின் இந்திய தூதர் – **சஞ்சய் குமார் பாண்டி.**
- பாதுகாப்புத்துறை உளவு அமைப்பின் இயக்குநர் **லெப்டினென்ட் ஜெனரல் -- கே.ஜே.எஸ் தில்லான்.**
- மத்திய நிதித்துறை செயல் அதிகாரி -- **ஏ.பி.பாண்டே.**
- ஐ.நா.விற்கான இந்தியாவின் நிரந்திர பிரதிநிதி – **டி.எஸ்.திருமூர்த்தி** (TAMILNADU).
- மத்திய ஊழல் கண்காணிப்பு ஆணையர் – **சஞ்சய் கோத்தாரி.**
- ஜம்மு & காஷ்மீர் உயர் நீதிமன்றம் நீதிபதி – **ரஜ்னேஷ் ஆஸ்வால்.**
- NASSCOM- NATIONAL ASSOCITION OF SOFTWARE AND SERVICE COMPANIES தலைவர் **UB. Pravin Rao.**
- ஐ, நா. சுற்றுசூழல் திட்டத்தின் (United Nation Environment Programme (UNEP) அடுத்த இரண்டாண்டுகளுக்கான தேசிய நல்லெண்ண தூதுவராக (National Goodwill Ambassador ) பாலிவுட் நடிகை " தியா மிர்ஷா " (Dia Mirza) நியமிக்கப்பட்டுள்ளார்.
- பாராளுமன்ற பொதுக்கணக்கு குழுவின் (Parliaments Public Account Committee (PAC)) தலைவர் ரஞ்சன் சவுத்திரி நியமிக்கப்பட்டுள்ளார்.
- ரிசர்வ் வங்கியின் மைய வாரியத்தின் இயக்குநராக தருண் பஜாஜ் நியமிக்கப்பட்டுள்ளார்.
- சர்வதேச ஹாக்கி கூட்டமைப்பின் தலைவர் - நரிந்தர் துருவ் பத்ரா நியமிக்கப்பட்டுள்ளார்.

## விருதுகள்:

- அறிவியல், தொழில்நுட்ப துறையில் சிறந்து விளங்குவோர்க்கு வழங்கப்படும் விருதான **“சாந்தி ஸ்வரூப் பட்நாகர் விருது 2018”** ஆம் ஆண்டிற்கான மருத்துவத்துறை பிரிவில் **டாக்டர் கணேசன் வெங்கட் சுப்பிரமணியன்** என்பவருக்கு வழங்கப்பட்டது.
    - இவர் சென்னை ஸ்டாலின் மருத்துவ கல்லூரியில் பயின்று தற்போது பெங்களூரில் பணியாற்றி வருகிறார்.
- ரஷ்ய தயாரிப்பான மிக் - 21 விமானத்தைக் கொண்டு பாகிஸ்தானின் எப்-16 விமானத்தை சுட்டு வீழ்த்திய **“அபிநந்தன் வர்த்தமன்”** என்பவருக்கு **பகவான் மகாவீர் அஹிம்சை விருது** வழங்கப்பட்டுள்ளது.
    - இவ்விருதினை பெறும் முதல் நபர் என்ற பெருமையை பெற்றுள்ளார்.
- இந்திய ஏவுகணைத் திட்டங்களில் தன்னுடைய தனித்துவ தலைமைப் பண்பிற்காக, **“2019 ஏவுகணை அமைப்புகள் விருது”** என்னும் பெருமை விருதினை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் தலைவர் **G.சதீஷ் ரெட்டி**க்கு அமெரிக்க வானியல் மற்றும் விண்வெளி நிறுவனம் வழங்கியுள்ளது.
- தூய்மை இந்திய திட்டத்தின் கீழ் வழங்கப்படும் **“ஸ்வச் சர்வேக்சேன் விருது- 2019“ ஐ புது டெல்லியில் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த்** அறிவித்துள்ளார்.
    - இதில், இந்தியாவின் தூய்மையான நகரங்கள் பட்டியலில் **மத்திய பிரதேசத்தின் இந்தூர்** நகரமானது தொடர்ந்து மூன்றாவது முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.
- மகாராஷ்ட்ரா மாநிலத்தின் **முதலாவது முதலமைச்சர் சவான் நினைவாக வழங்கப்படும் யஸ்வந்த் ராவ் சவான் தேசிய விருதானது, முன்னாள் ரிசர்வ் வங்கி ஆளுநர் ரகுராம் ராஜனுக்கு** வழங்கப்பட்டுள்ளது.
- குரேஷிய நாட்டின் உயரிய விருதான Grand Order of the King of Tomislav என்ற விருதானது **இந்தியக் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த்** அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

- இந்தியாவின் உணவு பாதுகாப்பு மற்றும் தரநிலைகள் ஆணையத்தின் (FSSAI) 100 நாள் நுகர்வோர் சேவை திட்டமான " ஸ்வஸ்த் பாரத் யாத்ரா" (Swatch Bharath Yatra) தேசிய பிரச்சார இயக்கத்தில் தமிழ்நாடு ஒட்டு மொத்த அளவில் சிறந்த மாநிலமாக அறிவிக்கப்பட்டுள்ளது.
    - இத்திட்டம் அக்டோபர் 16, 2018 ல் தொடங்கப்பட்டது.
- 2018ம் ஆண்டிற்கான **சியோல் அமைதி விருதை தென்கொரியா**, பிரதமர் மோடிக்கு வழங்கியது.
- **தூய்மை இந்தியா (Swatch Bharath)** திட்டத்தை சிறப்பாக செயல்படுத்திய நகராட்சிக்கு வழங்கப்படும் "ஸ்வெச்சத்தா சிறப்பு விருது" (Swachata Excellence Award), **ரைய்கர் (சத்தீஸ்கர்)** நகராட்சிக்கு வழங்கப்பட்டுள்ளது.
    - 2 ஆம் இடத்திற்கான விருது அம்பிகாபுர் (சத்தீஸ்கர்) நகராட்சிக்கும், 3 ஆம் இடம் தமிழகத்தின் கும்பகோணம் நகராட்சிக்கும் வழங்கப்பட்டுள்ளது
- **தூய்மை இந்திய திட்டம் (Swatch Bharath) அக்டோபர்** 2, 2014ல் தொடங்கப்பட்டது டிசம்பர் 11 அன்று **இம்பாலில் நடந்த விழாவில்**, இந்திய குத்துச்சண்டை வீராங்கனை **MC மேரி கோமுக்கு, மணிப்பூர் மாநில அரசாங்கம் ' மீதோயிலய்மா' (ராணிக்கு இணையானவர்)** பட்டம் வழங்கி கௌரவித்துள்ளது.
- **2018 ஆம் ஆண்டிற்கான சித்திரை தமிழ்புத்தாண்டு விருதுகள்** தமிழக அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது அதில் முக்கியமான சில விருதுகள்.
    - தமிழ்த்தாய் விருது - புவனேஸ்வரம் தமிழ் சங்கம்
    - கபிலர் விருது - மி. காசுமான்
    - இளங்கோவடிகள் விருது - சிலம்பொலி சு. செல்லப்பன்
    - உ.வே.சா விருது - நடன. காசிநாதன்
    - ஜி.யு.போப் விருது - கோ. சந்திரசேகரன்
    - உமறுப்புலவர் விருது - நசீமா பானு
    - சொல்லின் செல்வர் விருது - க. முருகேசன்
    - அம்மா இலக்கிய விருது - உலக நாயகி பழனி.

- அரிய சேவை செய்வதற்காக ஸ்பெயின் நாட்டில் வழங்கப்படும் அந்நாட்டின் மிக உயரிய விருதான ‘**கிராண்ட் கிராஸ்**‘ (Grand Cross of Order of Civil Merit) விருது **இந்தியாவின் முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ்க்கு** வழங்கப்பட்டுள்ளது.
  - கடந்த 2015 ல் நேபாலத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தின் போது ஆபத்தான இடத்தில் ஸ்பெயின் நாட்டின் 71 பேரை இந்திய அரசு காப்பாற்றியதற்கு நன்றி தெரிவிக்கும் வகையில் இவ்விருது வழங்கப்பட்டது.
- இந்தியாவின் முதல் ‘**கால்பந்து ரத்னா விருது**’ **சுனில் சேத்ரிக்கு** வழங்கப்பட்டுள்ளது. ஏற்கனவே “பத்மஸ்ரீ” விருதானது சமீபத்தில் வழங்கப்பட்டது. “பத்ம ஸ்ரீ” விருது பெறும் 6 வது கால்பந்து வீரர் என்ற பெருமையை பெற்றுள்ளார்.
- **வன விலங்குகள் மற்றும் தாவரங்களை பாதுகாப்பதற்காக வழங்கப்படும்** சர்வதேச விருதான **“உலகளாவிய எதிர்காலத்திற்கான இயற்கை விருது - 2019”** இந்தியாவின் **திவ்யா கர்னாடு (Divya Karnad)** என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது
  - இவர் இந்த விருதுனை பெறும் முதல் பெண்மணி என்ற பெருமையை பெற்றுள்ளார்.
  - இதற்கு முன், **இவ்விருதினை பெற்ற இந்தியர் - சருதுத் மிஸ்ரா (Charudutt Mishra)** என்பவர் ஆவார்.
- **கணினி மயமாக்கப்பட்ட** தகவலை மக்கள் தெரிந்து கொள்ளும் வகையில், **இணைய தளத்தில் பதிவேற்றம் செய்த, வேலூர் மாவட்டத்திற்கு ” வெப் ரத்னா தங்க விருது “** வழங்கப்பட்டுள்ளது.
  - இவ்விருதானது மத்திய தகவல் மற்றும் தொழில்நுட்பத் துறை அமைச்சர் ரவிசங்கர் பிரசாத்தால் வழங்கப்பட்டது.
- **லாஸ் ஏஞ்சல்ஸ் (அமெரிக்கா)** நகரில் நடைபெற்ற **91வது ஆஸ்கர் விருது வழங்கும் விழாவில், இந்திய பெண்கள் குறித்து எடுக்கப்பட்ட “ பிரியட் எண்ட் ஆஃப் சென்டன்ஸ் (Period End of Sentence)** என்ற படத்திற்கு **சிறந்த ஆவண குறும் படத்திற்கான விருது** வழங்கப்பட்டுள்ளது.
  - இயக்கியவர் - ரெய்கா செஷ்டாப்ச்சி (அமெரிக்கா) (Reyka Zentabchi)

- குறிப்பு:

  91 வது ஆஸ்கர் விருதுகள் முக்கியமானவை
  - சிறந்த திரைப்படம் - கிரீன் புக் (Green book )
  - சிறந்த நடிகர் - ராமிமாலிக் (Rami Malek )
  - சிறந்த நடிகை - ஒலிவியா கோல்மன்.
  - சிறந்த அனிமேசன் திரைப்படம் - Spiderman into spider verse.
- நிர்வாகத்தில் சிறந்து விளங்கும் உலக நாடுகளின் தலைவர்களுக்கு வழங்கும், 2019 ம் ஆண்டுக்கான **"பிலிப் கோட்லர் - பிரசிடென்ஷியல் விருது "(Philip Kotler Presidential award ) இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு** வழங்கப்பட்டது.
  - பிலிப் கோட்லர் விருது பெறும் முதல் அரசியல் தலைவர் பிரதமர் நரேந்திர மோடி ஆவார்.
- நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் பிறந்த நாளன்று (ஜனவரி 23) **"சுபாஷ் சந்திர போஸ் அப்தா பிரபந்தன் புரஸ்கர்" என்ற விருதை வழங்குவதாக மத்திய அரசு அறிவிருத்திருந்தது.**
  - அதன்படி 2019 ம் ஆண்டிற்கான சுபாஷ் சந்திர போஸ் அப்தா பிரபந்தன் புரஸ்கர் விருது **"தேசிய பேரிடர் பதிலளிப்பு படையின் 8வது படைப்பிரிவிற்கு"** வழங்கப்பட்டுள்ளது.
- 2018 ஆம் ஆண்டுக்கான **சாகித்திய அகாதெமியின் சிறந்த மொழி பெயர்ப்புக்கான விருது குளச்சல் மு. யூசி:ப்பிற்கு (கன்னியாகுமரி)** கிடைத்துள்ளது.
  - இவருக்கு இந்து கோபனின் **"மணியன் பிள்ளையிட ஆத்ம கதா"** என்ற மலையாள சுயசரிதையை **"திருடன் மணியன் பிள்ளை"** என்ற பெயரில் மொழி பெயர்த்தற்காக இவ்விருது வழங்கப்பட்டது.
- 2018 ஆம் ஆண்டுக்கான சாகித்ய அகாதமி விருதுக்கு தலை **சிறந்த எழுத்தாளாரான எஸ்.ராமகிருஷ்ணன்** அவர்களுக்கு கிடைத்துள்ளது.
  - இது அவர் எழுதிய **சஞ்சாரம்** என்ற நாவலுக்கு மத்திய அரசினால் வழங்கப்பட்டது.

- 2019 குடியரசு தின விழாவில் இராணுவத்தில் வீர தீர செயல் புரிந்தவர்களுக்காக வழங்கப்படும் மிக உயரிய விருதான **அசோக் சக்ரா விருது காஷ்மீர் மாநிலத்தைச் சேர்ந்த இராணுவ வீரர் "நசீர் அகமதுவானி" (மரணத்திற்க்கு பிறகு)** என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது
    - இவ்விருதானது **1952** முதல் வழங்கப்பட்டு வருகிறது.
- 2008 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியில் தங்கம் வென்ற இந்திய துப்பாக்கி சுடுதல் வீரர் **அபினவ் பிந்த்ரா** சர்வதேச துப்பாக்கி சுடுதல் சம்மேளத்தின் உயரிய கவுரவமான **"புளூ கிராஸ் விருது"** க்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- **மத்திய அரசின் விவசாயத்துறை சார்பில்** வழங்கப்படும் விவசாயத்தின் மேம்பாட்டுக்கான " கிரிஷி கர்மன்" (Krishi Karman Award) விருது **"ஜார்கண்ட்"** மாநிலத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.
    - அரிசிக்கான விளைச்சலில் அதிக பங்குபெற்றதற்காக இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.
- இலக்கிய துறையில் சாதனை படைத்தவர்களுக்கு சாகித்ய அகாதெமியால் வழங்கப்படும் உயரிய விருதான 2018ம் ஆண்டின் (54 வது) ஞானபீட விருதுக்கு பிரபல ஆங்கில நாவலாசிரியர் " அமிதவ் கோஷ் " என்பவர் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- ஆயுர் வேதா ரத்னா விருது 2020 ஆம் ஆண்டில் பெற்றவர்- **டாக்டர் பிரதாப் சவுகான்**,
- பத்ம விருதுகள் 2020 பெற்றவர் - பத்ம விபூசன் 7 நபருக்கும், பத்ம பூசன் 16 நபருக்கும், பத்மஸ்ரீ 118 நபருக்கும் மொத்தம் 141 நபருக்கு வழங்கப்பட்டுள்ளது.
- தமிழகத்தில் பத்ம விபூசன் 2 நபருக்கும், பத்மஸ்ரீ 5 நபருக்கும், மொத்தம் 7 நபருக்கு வழங்கப்பட்டுள்ளது.
- கிரிஸ்டல் விருது - தீபீகா படுக்கோன்.
- 29வது சரஸ்வதி சம்மன் விருது 2019 இல் பெற்றவர் - வாசுதேவ் மோகி (சிந்தி மொழி எழுத்தாளர்).
- SERB சிறந்த பெண் அறிவியல் ஆராய்ச்சியாளர் விருது பெற்றவர்- Dr. நிதி குமார்.
- டான் டேவிட் பரிசு 2020 - **கீதாசென்** (India).

- ஆஸ்கர் விருது வென்ற முதல் வெளிநாட்டு திரைப்படம்- பாராசைட்(South Korea).
- கணிணி துறையின் மிக உயரிய விருது “ ஆபல் பரிசு 2020” - ஹில்லெல் பரசஸ்டென்பெர்க் & கிரிகரி மார்குலிஸ்.
- M.S.சுவாமிநாதன் விருது 2017-2019- V..பர்வீன் பானு (Telangana).
- BBC 2019 ஆம் ஆண்டிற்கான சிறந்த இந்திய விளையாட்டு வீராங்கனை விருது பெற்றவர் - P.V. சிந்து.
- வாழ்நாள் சாதனை விருது - P.T. உஷா.
- பிரிட்ஷ்கர் கட்டடக்கலை விருது 2020 - யோனே ஃபார்ரல் & ஷெல்லிமாக் நாமரா.
- 2019 ஆம் ஆண்டுக்கான **சாகித்திய அகாதெமியின் சிறந்த மொழி பெயர்ப்புக்கான விருது கே.வி.ஜெயஸ்ரீ** அவர்களுக்கு கிடைத்துள்ளது.
    - இவருக்கு மனோஜ் குரோரின் “**நிலம் பூத்த மலரன்ன நாள்**” என்ற மலையாள நாவலை ”**நிலம் பூத்த மலர்ந்த நாள்**” என்ற பெயரில் மொழி பெயர்த்தற்காக இவ்விருது வழங்கப்பட்டது.
- 2019 ஆம் ஆண்டுக்கான சாகித்ய அகாதமி விருதுக்கு தலை **சிறந்த எழுத்தாளாரான சோ.தர்மன்** அவர்களுக்கு கிடைத்துள்ளது.
    - இது அவர் எழுதிய ”**சூல்**” என்ற நாவலுக்கு மத்திய அரசினால் வழங்கப்பட்டது.
- புலிட்சார் பரிசு 2020 - தார் யாசின் , முக்தர் கான் , சன்னி ஆனந்த் ஆகியவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.
- ஜப்பான் நாட்டின் ‘ ஆர்டர் ஆஃப் ரைசிங் சன் ‘ விருது 2020 - தன்ஞும் தபாலி சிங்கிற்க்கு வழங்கப்பட்டுள்ளது.
- இங்கிலாந்து அரசின் ‘அலெக்சாண்டர் தால்ரிம்பிள் விருது 2019 - வைஸ் வினய் பாட்வர்க்கு வழங்கப்பட்டுள்ளது.
- காமன்வெல்த் பாய்ண்ட் ஆஃப் லைட் விருது 2020 - ஜாதவ் பாயங்கிற்கு வழங்கப்பட்டுள்ளது.
- பிரிட்டிஷ்சார் கட்டடக்கலை பரிசு 2020 - யோன்னே ஃபார்ரல், ஷெல்லி மாக் நாமரா ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளது.

**நோபல் பரிசு பெற்றவர்கள் 2019:**

1. **மருத்துவம்**:
    1. வில்லியம் ஜி கேலின் - அமெரிக்கா
    2. கிரைக் எல் செமென்ஸா - அமெரிக்கா
    3. பீட்டர் ஜே ராட்கிளிஃபும் - பிரிட்டன்

"For the discoveries of how cells sense and adapt to oxygen availability"

2. **இயற்பியல்**:
    1. ஜேம்ஸ் பீபீள்ஸ் - கனடா
    2. மைகேல் மேயர் - சுவிட்சர்லாந்து
    3. நிதியர் க்யூலோஸ் - சுவிட்சர்லாந்து

"For theoretical discoveries in physical cosmology and exo planet a solar type star "

3. **வேதியியல்**:
    1. ஜான் பி. குட்எனாப் - ஜெர்மனி
    2. ஸ்டான்லி விட்டிங்காம் - இங்கிலாந்து
    3. அகிரா யோஷினா - ஜப்பான்

"For the development of lithium - ion batteries "

4. **இலக்கியம்**:

| | | |
|---|---|---|
| 2018 | ஒல்கா டோகார்ஹீப் - போலாந்து | "மொழியியல் புத்தி கூர்மை மூலம் மனித அனுபவம்" |
| 2019: | பீட்டர் ஹேண்டகே - தெற்கு ஆஸ்திரியா | "கலைக்களஞ்ஞியம் தொடர்பான கர்பனைக்கதை" |

5. **அமைதி**:

அபி அகமது அலி - எத்தியோபியா அதிபர்

"எரித்திரியாவுடன் ஒரு துணிச்சலான சமாதான ஒப்பந்தம் "

6. **<u>பொருளாதாரம்</u>**:

அபிஜித் பானர்ஜி - அமெரிக்கா

எஸ்தர் டூஃப்லோ - அமெரிக்கா

மெக்கேல் கிராம் - அமெரிக்கா

"உலகளாவிய வறுமையை ஒழிப்பது தொடர்பான பொருளாதார ஆய்விற்காக "

# முக்கிய தினங்கள்

- **தேசிய அறிவியல் தினம் - பிப்ரவரி 28 இந்திய விஞ்ஞானி சர்.சி.வி.இராமன், புதழ்பெற்ற இராமன் விளைவை கண்டுபிடித்த நாளான பிப்ரவரி 28ஆம் நாள்** ஒவ்வொரு ஆண்டும் **தேசிய அறிவியல் தினமாக** கொண்டாடப்பட்டு வருகிறது.
- **2019 ஆம் ஆண்டின்** தேசிய அறிவியல் தினத்தின் கருத்துரு **"Science for People and People for Science"** என்பதாகும்.
- **இராமன் விளைவு கண்டுபிடிக்கப்பட்ட ஆண்டு - பிப்ரவரி 28, 1928,** அதற்கான இயற்பியலுக்கான **நோபல் பரிசு வழங்கப்பட்ட ஆண்டு 1930 மற்றும் 1954 Bharat ratna விருது வழங்கப்பட்டது.**
- **உலக வனவிலங்கு நாள் (World Wild Life Day 2019) - மார்ச் 03** வினவிலங்குகளின் பாதுகாப்பிற்கான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஆண்டுதோறும் "உலக வனவிலங்கு நாள்" மார்ச்-03 அன்று கடைபிடிக்கப்படுகிறது..
- **பொதுக் கணக்கு தினம் (Civil Accounts Day 2019) - மார்ச்-01**
  மார்ச் 01, 1976 அன்று புதுடெல்லியில் இந்திய சிவில் அக்கவுண்ட்ஸ் சர்விஸ் (ICAS) தொடங்கப்பட்டதன் நினைவாக ஆண்டுதோறும் மார்ச்-1 அன்று "பொதுக் கணக்கு தினம் (Civil Accounts Day) கடைபிடிக்கப்படுகிறது.
- **தேசிய பாதுகாப்பு தினம்- மார்ச் 04 (National Security Day)**
  இராணுவ அதிகாரிகள், பாரா - இராணுவம், போலீஸ் அதிகாரிகள் மற்றும் கமாண்டோக்கள் போன்ற பாதுகாப்பு படையினரின் பணியை பாராட்டி ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 4 அன்று "ராஷ்டிரிய சுரகூஷா திவாஸ்" என்றழைக்கப்படும் தேசிய பாதுகாப்பு தினம் கொண்டாடப்படுகிறது.
- தேசிய பாதுகாப்பு தினமானது **1972** முதல் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. 48-வது தேசிய பாதுகாப்பு தினம் இந்தாண்டு கொண்டாடப்பட்டது.

- **தேசிய நோய்த்தடுப்பு நாள் - மார்ச் 10 (National Immunization Day)** இந்த தினத்தில் குடியரசுத் தலைவர் **"Pulse Polio 2019"** என்ற திட்டத்தை அறிமுகம் செய்துள்ளார்.
- **உலக நுகர்வோர் உரிமைகள் தினம் - மார்ச் 15** 2019ம் ஆண்டின் உலக நுகர்வோர் உரிமைகள் தின மையக்கருத்து- **"நம்பகமான திறன்மிகு உற்பத்திகள்" (Trusted Smart Products)** என்பதாகும்.
- **தேசிய தடுப்பூசி தினம்-மார்ச் 16 (National Vaccination Day)**
- **உலக உறக்க தினம் - மார்ச் 15 (World Sleep Day)** 2019 ஆம் ஆண்டின் உலக உறக்க தின மையக்கருத்து **"ஆராக்கியமான உறக்கம், ஆரோக்கிய வயது முதிர்வு" (Healthy Sleep, Healthy Aging)** என்பதாகும்.
- **உலகளாவிய மறு சுழற்சி தினம் - மார்ச் 18 (Global recycling day)** 2019ம் ஆண்டின் உலகளாவிய மறுசுழற்சி தினத்தின் கருத்துரு- **"எதிர்காலத்திற்காக மறுசுழற்சி" (Recycling into the future)**
- **உலக சிட்டுக்குருவிகள் தினம் - மார்ச் 20 (World Sparrow day)** மையக்கருத்து "நான் விரும்பும் சிட்டுக்குருவி" (I love Sparrow) என்பதாகும்.
- **சர்வதேச மகிழ்ச்சி தினம் -மார்ச் -20 (International day of Happiness)** 2019 -ஆம் ஆண்டின் சர்வதேச மகிழ்ச்சி தின மையக்கருத்து - **"மகிழ்ச்சியாக சேர்ந்திருப்போம்" (Happier together)** என்பதாகும்.
- **சர்வதேச காடுகள் தினம்- மார்ச் 21 (International day of Forest)** 2019ம் ஆண்டு சர்வதேச காடுகள் தின மையக் கருத்து- **"காடுகள் மற்றும் கல்வி- காடுகளை நேசிக்கக் கற்றுக்கொள்ளுங்கள்" (Forests and Education - Land to love Forests)** என்பதாகும்.
- **பகத்சிங், சுக்தேவ், ராஜகுரு** ஆகியோரின் நினைவு தினத்தை (**மார்ச் 23**) **பஞ்சாப் அரசு சார்பில் இளைஞர் அதிகாரமளித்தல் தினமாக (Youth Empowerment day)** கடைபிடிக்கப்படுகிறது.
- **உலக தண்ணீர் தினம் -மார்ச் 22 (World Water day)** 2019 உலக தண்ணீர் தின மையக்கருத்து- **"Leaving no one behind"** என்பதாகும்.

- **உலக வானியல் தினம்- மார்ச் 23 (World meteorological day)** 2019ம் ஆண்டிற்கான உலக வானியல் தின மையக்கருத்து- **"சூரியன், பூமி மற்றும் வானிலை "(The Sun, the Earth and the weather)** என்பதாகும்.
- **உலக காசநோய் தினம் - மார்ச் 24 (World Tuberculosis Day)**
- **தேசிய தியாகிகள் தினம் (National Martyrs Day -2019)**
  a) மகாத்மா காந்தியின் சுதந்திர போராட்டத்தினை நினைவுகூறுவதற்காக ஆண்டுதோறும் அவரது நினைவு நாளான ஜனவரி-30யை தேசிய தியாகிகள் தினமாக அனுசரிக்கப்படுகிறது.
  b) இது மகாத்மா காந்தியின் 71-வது நினைவு தினமாகும்.
- **உலக புற்றுநோய் தினம்- பிப்ரவரி 4** இந்த ஆண்டுக்கான (2019) உலக புற்றுநோய் தின மையக்கருத்து **- I am and I will**
- **சாலை பாதுகாப்பு வாரவிழா (2019),** பிப்ரவரி 04-10 (Road Safety week 2019 - 4 to 10 February 2019)
- பொதுமக்களிடையே சாலைபாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக தமிழக அரசு சார்பில் ஒவ்வொரு ஆண்டும் "சாலை பாதுகாப்பு வாரம்" கடைபிடிக்கப்படுகிறது.
- 2019ம் ஆண்டு 30-வது சாலைபாதுகாப்பு வாரவிழா 04.02.2019 முதல் 10.02.2019 வரை **"சாலை பாதுகாப்பு உயிர் பாதுகாப்பு"** என்ற கருப்பொருளை மையப்படுத்தி கடைபிடிக்கப்படுகிறது.
- **உலக ஈரநிலங்கள் தினம்-பிப்ரவரி 2** (World Wetlands Day) 2019ம் ஆண்டிற்கான மையக்கருத்து **"ஈரநிலங்கள் மற்றும் காலநிலை மாற்றம்" (Wetlands and Climate Change)**
- **தேசிய பெண்குழந்தைகள் தினம்-ஜனவரி 24.**
- **உலக வானொலி தினம் (World Radio Day) - பிப்ரவரி 13**, 2019ம் ஆண்டிற்கான மையக்கருத்து **உரையாடல், சகிப்புத்தன்மை மற்றும் அமைதி (Dialogue, Tolerance and Peace)** என்பதாகும்.
- **சர்வதேச தாய்மொழி தினம் - பிப்ரவரி 21 (International Mother Language Day)** 2019ம் ஆண்டிற்கான கருத்துரு **"உள்நாட்டு**

**மொழிகளின் வளர்ச்சி, அமைதி மற்றும் நல்லிணக்கத்தின் அடிப்படை" என்பதாகும். (Indigenous Languages Matter for development, Peace building and reconciliation)**

- **உலக ஹிந்தி தினம்- ஜனவரி 10**
- ஜனவரி 10,1975 ஆம் ஆண்டு மகாராஷ்டிரா மாநிலம் **நாக்பூரில் நடைபெற்ற முதல் உலக ஹிந்தி மாநாட்டை** நினைவு கூறும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் உலக ஹிந்தி தினம் ஜனவரி 10ம் நாள் கொண்டாடப்படுகிறது
- **தேசிய இளைஞர்கள் தினம்-12 ஜனவரி சுவாமி விவேகானந்தர் பிறந்த தினத்தை முன்னிட்டு கொண்டாடப்படுகிறது.**
- **தேசிய பெண் குழந்தைகள் தினம் - ஜனவரி (24) (National Girl Child day)** இந்தாண்டில், "சிறந்த எதிர்காலத்திற்கு பெண்களுக்கு அதிகாரமளித்தல்" என்ற குறிக்கோளுடன் பெண்கள் மற்றும் குழந்தைகள் அமைச்சகம் இத்தினத்தை கடைபிடிக்க உள்ளது.
- **தேசிய வாக்காளர் தினம் - ஜனவரி 25** 2011ம் ஆண்டு முதல் தேசிய வாக்காளர் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது. இது 9வது தேசிய வாக்காளர் தினமாக கொண்டாடப்பட்டது
- தேசிய வாக்காளர் தினத்தின் 2019 ம் ஆண்டின் மையக் கருத்து "எந்தவொரு வாக்காளரும் விடுபட்டுவிடக் கூடாது."
- **உலக எய்ட்ஸ் விழிப்புணர்வு தினம் -டிசம்பர் 01**
  a) எய்ட்ஸ் நோய் பரவுவதை பற்றி விளக்கவும், எய்ட்ஸ் நோயாளிகளின் சுகாதாரம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும், உலகம் முழுவதும் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 01 அன்று உலக எய்ட்ஸ் விழிப்புணர்வு தினம் அனுசரிக்கப்படுகிறது.
  b) 2018ஆம் ஆண்டின் உலக எய்ட்ஸ் தினத்தின் கருத்துரு **"Know your status"** என்பதாகும்.
- **சர்வதேச அடிமைத்தன ஒழிப்பு தினம் - டிசம்பர் 02 (International Day for the Abolition of Slavery)**
- **சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம்-டிசம்பர் 03,** 2018ம் ஆண்டு சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தின மையக்கருத்து (2018 Theme)

**மாற்றுத் திறனாளிகளை அதிகாரப்படுத்துதல் மற்றும் உள்ளடக்கிய சமத்துவத்தை உறுதிபடுத்துதல் (Empowering Persons with disabilities and ensuring inclusiveness and equality)** என்பதாகும்.

- **உலக மண் தினம் (World soil day) - டிசம்பர் 05** 2018 ம் ஆண்டிற்கான உலக மண் தின மையக்கருத்து (Theme)- **“மண் மாசுபாட்டிற்கான தீர்வாக இருங்கள்” (Be the solution of soil pollution)** என்பதாகும்.
- **தேசிய நுகர்வோர் தினம் - டிசம்பர் 24** 2018 ம் ஆண்டிற்கான மையக்கருத்து (Theme)- **”Timely disposal of consumer complaints”**
- **இந்தியாவின் முப்படை வீரர்களின் அரும்பணிகளையும், தியாகத்தையும் போற்றும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர்-7 ஆம் நாள் தேசிய படைவீரர் கொடி நாளாக** அனுசரிக்கப்படுகிறது.
    a) இக்கொடி நாள் **1949ஆம் ஆண்டு டிசம்பர் ஏழாம் நாள்** முதல் இந்தியா முழுவதும் கொண்டாடப்பட்டு வருகிறது.
- **தேசிய எரிசக்தி பாதுகாப்பு தினம் -டிசம்பர் 14 (National Energy conservation day)**
    a) ஆற்றலின் திறன் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றின் முக்கியத்துவம் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 14 அன்று தேசிய எரிசக்தி பாதுகாப்பு தினம் கடைபிடிக்கப்படுகிறது.
- **சர்வதேச அனைவருக்குமான சுகாதார பாதுகாப்பு தினம் - டிசம்பர் 12** 2018ம் ஆண்டின் கருத்துரு: **”அனைவருக்குமான சுகாதார பாதுகாப்புக்காக ஒன்றிணைதல்” (Unite for Universal Health Coverage. Now is the time for collective action)** என்பதாகும்.
- மகாத்மா காந்தி 73வது நினைவு தினம் - ஜனவரி 30
- உலக தொழுநோய் தினம் - ஜனவரி 30
- இந்திய செய்தித்தாள் தினம் - ஜனவரி 29
- சர்வதேச சுங்கவரி தினம் - ஜனவரி 26
- தேசிய பெண் குழந்தைகள் தினம் - ஜனவரி 26
- அரிய நோய்கள் தினம் - பிப்ரவரி 29

- தேசிய அறிவியல் தினம் - பிப்ரவரி 28
- உலக தன்னார்வ தொண்டு நிறுவனம் தினம் - பிப்ரவரி 27
- சர்வதேச தாய்மொழி தினம் - பிப்ரவரி 21
- உலக சிந்தனை தினம் - பிப்ரவரி 22
- உலக தியேட்டர் தினம் - மார்ச் 27
- உலக கவிதை தினம் - மார்ச் 21
- உலக சிட்டுக்குருவி தினம் - மார்ச் 20
- சர்வதேச மகிழ்ச்சி தினம் - மார்ச் 20
- உலக நோய் தடுப்பு வாரம் - ஏப்ரல் கடைசி வாரம்
- சர்வதேச நடன தினம் - ஏப்ரல் 29
- உலக மலேரியா தினம் -- ஏப்ரல் 25
- முதலாவது ஐ.நா. சர்வதேச பிரதிநிதிகள் தினம் - ஏப்ரல் 25
- தேசிய பஞ்சாயத்ராஜ் தினம் - ஏப்ரல் 24
- ஆயுஷ்மான் பாரத் தினம் - ஏப்ரல் 30
- தேசிய தொழில்நுட்ப தினம் (national technology day) - மே 11
- சர்வதேச அன்னையர் தினம் - மே 10
- இரண்டாம் உலகப் போரில் உயிரிழந்தோரின் சர்வதேச நினைவுதினம் ( Time of remembrance and reconciliation for those who lost their lives during World War II) - மே 8,9
- உலக வலசை போகும் பறவைகள் தினம் (world migration day )- மே 9 மையக்கருத்து 2020 - 'பறவைகளே, எங்கள் உலகை இணையுங்கள் ("Birds Connect Our World").
- உலக ரெட் கிராஸ் / ரெட் கிரசண்ட் தினம் - மே 8
- உலக தாலசீமியா நோய் தினம் - மே 8
- உலக தடகள தினம் - மே 7
- உலக கை சுகாதார தினம் - மே 5
- உலக ஆஸ்துமா நோய் தினம் - மே 5
- உலக தீயணைப்புப்படை வீரர்கள் தினம் - மே 5
- உலக ஊடக சுதந்திர தினம் - மே 3
- உலக சிரிப்பு தினம் - மே 3

- உலக சூரைமீன் தினம் - மே 2
- சர்வதேச வானியல் தினம் - மே 2
- சர்வதேச தொழிலாளர் தினம் - மே 1
- உலக எயிட்ஸ் தடுப்பூசி தினம் - மே 18
- சர்வதேச அருங்காட்சியகம் தினம் - மே18
- உலக உயர் இரத்த அழுத்த தினம் - மே 17
- சர்வதேச ஒளி தினம் - மே 16
- தேசிய டெங்கு தினம் - மே 16
- தேசிய அருகிவரும் விலங்கின தினம் - மே 15
- சர்வதேச குடும்ப தினம் - மே 15
- சர்வதேச செவிலியர் தினம் - மே 12
- சர்வதேச அமைதியாக இணைந்து வாழும் தினம் - மே 16
- காமன்வெல்த் தினம் - மே 24
- ஐநா அமைதிகாக்கும் சர்வதேச நாள் - மே 29
- இந்திப்பத்திரிகைகள் தினம் - மே 30
- உலக புகையிலை எதிர்ப்பு நாள் - மே 31
- உலக பால் தினம் - ஜூன் 1
- தெலுங்கானா உருவான நாள் - ஜூன் 2
- உலக சுற்றுச்சூழல் தினம் - ஜூன் 5
- உலக பெருங்கடல் தினம் - ஜூன் 8
- சர்வதேச நிலை கடக்கும் விழிப்புணர்வு நாள் - ஜூன் 10
- குழந்தை தொழிலாளர் எதிர்ப்பு தினம் - ஜூன் 12
- உலக ரத்த தான தினம் - ஜூன் 14
- உலக அகதிகள் தினம் - ஜூன் 20
- சர்வதேச யோகா தினம் - ஜூன் 21
- போதைப்பொருள் மற்றும் சட்டவிரோத கடத்தலுக்கு எதிரான சர்வதேச நாள் - ஜூன் 26
- தேசிய புள்ளிவிபர தினம் - ஜூன் 29
- தேசிய மருத்துவர்கள் தினம், சரக்கு மற்றும் சேவைகள் வரி நாள் - ஜூலை 1

- அமெரிக்கா சுதந்திர தினம் - ஜூலை 4
- சர்வதேச கூட்டுறவு தினம் - ஜூலை 6
- திறன் விழிப்புணர்வு வாரம் - ஜூலை இரண்டாவது வாரம்
- உலக மக்கள் தொகை தினம் - ஜூலை 11
- சர்வதேச உலக நீதி தினம் - ஜூலை 17
- தேசிய ஒளிபரப்பு நாள் - ஜூலை 23
- தேசிய வெப்ப பொறியாளர் தினம் - ஜூலை 24
- கார்கில் வெற்றி தினம் - ஜூலை 26
- உலக இயற்கை பாதுகாப்பு தினம் - ஜூலை 28
- சர்வதேச நட்பு தினம் - ஜூலை 30
- உலக தாய்ப்பால் கொடுக்கும் வாரம் - ஆகஸ்ட் முதல் வாரம்
- தேசிய கைத்தறி நாள் - ஆகஸ்ட் 5
- உலக பழங்குடி மக்களின் சர்வதேச தினம் - ஆகஸ்டு 9
- உலக உயிர் எரிபொருள் தினம் - ஆகஸ்ட் 10
- சர்வதேச இளைஞர் தினம் - ஆகஸ்ட் 12
- பாகிஸ்தான் சுதந்திரதினம் - ஆகஸ்ட் 14
- உலக புகைப்பட நாள் - ஆகஸ்ட் 19
- பெண்கள் சமத்துவ நாள் - ஆகஸ்ட் 26
- தேசிய விளையாட்டு தினம் - ஆகஸ்ட் 29
- சிறுதொழில்கள் தினம் - ஆகஸ்ட் 30
- தேசிய ஊட்டச்சத்து வாரம் - செப்டம்பர் முதல் வாரம்
- ஆசிரியர் தினம் ,சர்வதேச தொண்டு நாள் - செப்டம்பர் 5
- சர்வதேச எழுத்தறிவு தினம் - செப்டம்பர் 8
- உலக தற்கொலை தடுப்பு நாள் - செப்டம்பர் 10
- உலக முதலுதவி நாள் - செப்டம்பர் 14
- சர்வதேச ஜனநாயக தினம் - செப்டம்பர் 15
- சர்வதேச ஓசோன் தினம் - செப்டம்பர் 16
- சர்வதேச அமைதி நாள் - செப்டம்பர் 21
- உலக கடல் தினம் - செப்டம்பர் 26

- உலக சுற்றுலா தினம் ,சர்வதேச காது கேளாதோர் தினம் - செப்டம்பர் 27
- சர்வதேச மொழிபெயர்ப்பு தினம் - செப்டம்பர் 30
- சர்வதேச முதியோர் தினம் - அக்டோபர் 1
- சர்வதேச அகிம்சை தினம் - அக்டோபர் 2
- உலக வனவிலங்கு தினம் - அக்டோபர் 4
- இந்திய விமானப்படை தினம் - அக்டோபர் 8
- பெண் குழந்தைகள் சர்வதேச நாள் - அக்டோபர் 11
- உலகளாவிய கை கழுவுதல் நாள் - அக்டோபர் 15
- உலக உணவு தினம் - அக்டோபர் 16
- சர்வதேச வறுமை ஒழிப்பு நாள் - அக்டோபர் 17
- தேசிய ஒற்றுமை தினம் - அக்டோபர் 20
- ஐக்கிய நாடுகள் தினம் - அக்டோபர் 24
- தேசிய ஆயுர்வேத தினம் - அக்டோபர் 25
- உலக பக்கவாத தினம் - அக்டோபர் 29
- உலக சிக்கன தினம் - அக்டோபர் 30
- உலக நகரங்கள் தினம் - அக்டோபர் 31
- உலக சைவ தினம் - நவம்பர் 1
- உலக சுனாமி விழிப்புணர்வு தினம் - நவம்பர் 5
- குழந்தை பாதுகாப்பு நாள் - நவம்பர் 7
- தேசிய புற்றுநோய் விழிப்புணர்வு நாள் - நவம்பர் 7
- சட்ட சேவைகள் தினம் - நவம்பர் 9
- உலக அறிவியல் தினம் - நவம்பர் 10
- உலக நிமோனியா தினம் - நவம்பர் 12
- உலக கருணை தினம் - நவம்பர் 11
- குழந்தைகள் தினம், உலக நீரிழிவு தினம் - நவம்பர் 14
- சகிப்புத்தன்மை காண சர்வதேச நாள் - நவம்பர் 16
- தேசிய ஒருங்கிணைப்பு நாள் ,உலக கழிவறை தினம்-நவம்பர்19
- உலகளாவிய குழந்தைகள் தினம் - நவம்பர் 20
- உலக தொலைக்காட்சி தினம் - நவம்பர் 21

- தேசிய சட்ட தினம் - நவம்பர் 26
- கொடி நாள் - நவம்பர் 30
- தேசிய மாசு கட்டுப்பாட்டு நாள் - டிசம்பர் 2
- இந்திய கடற்படை தினம் - டிசம்பர் 4
- சர்வதேச தன்னார்வ தினம் - டிசம்பர் 5
- சர்வதேச ஊழல் எதிர்ப்பு நாள் - டிசம்பர் 9
- மனித உரிமைகள் தினம் - டிசம்பர் 10
- சர்வதேச மலை நாள் - டிசம்பர் 11
- சர்வதேச தேநீர் தினம் - டிசம்பர் 15
- சிறுபான்மையினர் உரிமை தினம் & சர்வதேச புலம்பெயர்ந்தோர் தினம் - டிசம்பர் 18
- சர்வதேச மனித ஒற்றுமை நாள் - டிசம்பர் 20
- தேசிய கணித தினம் - டிசம்பர் 22
- உழவர் தினம் - டிசம்பர் 23
- நல்லாட்சி தினம் - டிசம்பர் 25

# பொருளாதார நிகழ்வுகள்

- கடந்த 2018ம் ஆண்டில் **சீர்திருத்த நடவடிக்கைகள் அமல்படுத்தப்பட்ட பொதுத்துறை வங்கிகளில் பஞ்சாப் நேஷனல் வங்கி முதலிடத்தில்** உள்ளது.
    1. இதற்காக அந்த வங்கி 100 மதிப்பெண்களில் 78.4 மதிப்பெண்களைப் பெற்றுள்ளது
    2. இதனைத் தொடர்ந்து பேங்க் ஆ∴ப் பரோடா (77.8), எஸ்பிஐ (74.6) ஓரியண்டல் பேங்க் ஆ∴ப் காமர்ஸ் (69), கனரா வங்கி (67.5), சிண்டிகேட் வங்கி (67.1) ஆகியவை அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.
- **மத்திய அரசு 20 ரூபாய் நாணயத்தை வெளியிட்டுள்ளது. இது 12 முனைகளைக் கொண்டதாக** (பாலிகோன் - பல கோணங்கள்) வடிவமைக்கப்பட்டுள்ளது.
    - பார்வைத் திறன் குறைபாடு உடையவர்களும் எளிதில் உணரும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளதாக அருண் ஜேட்லி திவித்துள்ளார்.
- **உலக வங்கியிடம் இருந்து அதிக கடன் பெறும் நாடுகளின் பட்டியலில் இந்தியா முதல் இடத்தில்** உள்ளது. கடந்த நான்காண்டுகளில் உலக வங்கியிடம் இருந்து அதிக கடன் வாங்கிய நாடுகளின் பட்டியலில் இந்தியா மூன்றாவது இடத்தில் உள்ளது.
- இந்திய ரிசர்வ் வங்கி பிறப்பித்த உத்தரவுகளை (வங்கிகளில் பணம் கையாள்வது வங்கிகளுக்கிடையே தகவல் பரிமாற்றம் மற்றும் கணக்குகளை மறு கட்டமைப்பு செய்தல்) **கடைபிடிக்காத மூன்று தேசிய வங்கிகளுக்கு 3.5 கோடி ரூபாய் அபராதம்** விதிக்கப்பட்டுள்ளது.
    - பாங்க் ஆப் இந்தியா - 1 கோடி
    - ஓரியண்டல் பாங்க் ஆப் காமர்ஸ் - 1.5 கோடி
    - பஞ்சாப் நேஷனல் வங்கி - 1 கோடி

- மத்திய நிதியமைச்சகம், ஆண்டு நிதிநிலை அறிக்கையைத் தயாரிக்கும் முறை பற்றி பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த கட்டுரையில் **"உங்கள் பட்ஜெட்டை அறியவும்"** **(Know your Budget)** என்ற தொடரை தொடங்கியுள்ளது.
    - இதில் பட்ஜெட்டில் உபயோகப்படுத்தப்படும் பல்வேறு வார்த்தைகளின் விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளது.
- மத்திய நிதியமைச்சகத்தின் கீழ் செயல்படும் மத்திய மறைமுகவரி மற்றும் சுங்கவரிகள் வாரியமானது பரிவர்த்தனை செலவினங்களை குறைப்பதற்காகவும் தொழில் தொடங்குவதை எளிதாக்கவும் அந்நிய செலவாணி மதிப்பிற்கான நாணயங்களின் பட்டியலில் கொரியாவின் **"வோன்" (Won)** மற்றும் துருக்கியின் **"லிரா" (Lira)** ஆகியவற்றை சேர்த்துள்ளது.
- 2019 ஆம் ஆண்டில் ஸ்மார்ட்போன் விற்பனையில் முதல் முறையாக இந்தியா அமெரிக்காவை விஞ்சி சாதனை.
- Vodafone m-pesa digital payment நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட அங்கீகாரதை RBI ரத்து செய்துள்ளது.
- 2019-20 நிதியாண்டில் பொருளாதார வளர்ச்சி 4.8% ஆக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.
- 2019-20 நிதியாண்டில் பயனாளர்களுக்கு நேரடியாக பணம் செலுத்துவதில் முதலிடம் ஹரியானா மாவட்டம்.
- உலகில் அதிக சொத்து உள்ள நாடுகளில் இந்தியா 7ஆம் இடம்.
- லாட்டரி சீட்டுகளுக்கு 28% GST விதிப்பு முறை மார்ச் 1 2020 முதல் நாடு முழுவதும் அமலாக்கப்படுகிறது.
- Uttar Pradesh சோன்பத்ராவில் 3350 டன் அளவுள்ள 2 பெரிய தங்கச் சுரங்கம் கண்டறியப்பட்டுள்ளது.
- கடந்த 18 ஆண்டுகளில் இந்தியா முதல் முறையாக 2019-20 நிதியாண்டில் தாமிரத்தை இறக்குமதி செய்துள்ளது.
- பொருளாதார சுதந்திர பட்டியலில் இந்தியா 120 வது இடம்.

- கொரோனா வைரஸ் தாக்குதலில் பாதிப்படைந்தோருக்கு அவசரகால கடனுதவி SBI வங்கி அறிமுகப்படுத்தியுள்ளது.
- COVID- 19 ECONOMIC RESPONSE TASK FORCE தலைவர் நிர்மலா சீத்தாராமன்.
- SBI வங்கி குறைந்தபட்ச இருப்புத்தொகை வைத்திருக்க தேவையில்லை என தற்போது கூறியுள்ளது.
- INDUSTRIAL DISPUTE ACT 1947 கீழ் வங்கி சேவைகளை அக்டோபர் 2021 வரை பொது பயன்பாட்டு சேவை (public utility service) என மத்திய அரசு அறிவித்துள்ளது.
- Reliance Jio 9.99% பங்குகளை Facebook நிறுவனம் கையகப்படுத்தியுள்ளது.
- Twitter இல் அதிக நபர்களால் பின்தொடரப்படும் மத்திய வங்கி RBI.
- COVID-19 தடுப்பு மற்றும் நிவாரணத் திட்டங்களுக்கு இந்தியாவிற்கு 1 பில்லியன் அமெரிக்க டாலர் கடனுதவி வழங்குவதாக BRICS அமைப்பின் NEW DEVELOPMENT BANK OF BRICS கூறியுள்ளது.
- நடமாடும் ATM சேவை - ICICI வங்கி அறிமுகப்படுத்தியுள்ளது.
- இந்திய பொருளாதாரம் 2018-19 - 6.1% வளர்ச்சி.
- 2020 ஆம் ஆண்டுக்கான இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி மதிப்பீட்டை சர்வதேச தரக்குறியீட்டு நிறுவனமான மூடிஸ் இன்வெஸ்டார்ஸ் சர்வீஸ் 5.4 % ஆக குறைத்துள்ளது. இந்த வளர்ச்சி 2021 இல் 5.8 % ஆக இருக்கும் எனவும் கணித்துள்ளது.
- இந்திய ரிசர்வ் வங்கியின் நிதியாண்டை தற்போதுள்ள ஜுலை-ஜுன் என்பதிலிருந்து மாற்றம் செய்து அரசு கடைபிடித்து வரும் ஏப்ரல் - மார்ச் நிதியாண்டுடன் இணைக்க ரிசர்வ் வங்கி இயக்குநர் குழு பரிந்துரை செய்துள்ளது.
- ஜி.எஸ்.டி வரி செலுத்துவதை ஊக்குவிக்க 'ஜி.எஸ்.டி லாட்டரி திட்டம்' என்ற பெயரில் குலுக்கல் முறையில் ரூ.10 லட்சம்

முதல் அதிகபட்சமாக ரூ.1 கோடி வரை பரிசு வழங்கும் புதிய திட்டத்தை அறிமுகப்படுத்த மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

- இந்தியாவில் அதிக இறக்குமதியாகும் பொருட்கள் - கச்சா எண்ணெய், தங்கம், பெட்ரோலிய பொருட்கள், நிலக்கரி, கற்கரி, எரிபொருள் கட்டிகள்.
- இந்தியா அதிக இறக்குமதி செய்யும் நாடு - சீனா
- இந்தியா அதிக ஏற்றுமதி செய்யும் நாடு - அமெரிக்கா.
- செல்லிடப்பேசிக்கு 18% GST உயர்த்தப்பட்டுள்ளது.
- உள்நாட்டு விமானப் போக்குவரத்தில் வெளிநாட்டு நேரடி முதலீட்டுக் கொள்கைக்கு ( Foreign Direct Investment Policy on Civil Aviation ) மத்திய அமைச்சரவை 4-3-2020 அன்று ஒப்புதல் வழங்கியுள்ளது.
- நிறுவனங்கள் ( இரண்டாவது திருத்த) மசோதா, 2019 (Companies (Second amendment) bill, 2019) க்கு மத்திய அமைச்சரவை 4-3-2020 அன்று ஒப்புதல் வழங்கியுள்ளது.
- ஏர் இந்தியா நிறுவனத்தின், 100 % பங்குகளை வாங்க வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கு அனுமதி அளிப்பது என மத்திய அமைச்சரவையினால் முடிவு செய்யப்பட்டுள்ளது.
- பொதுத்துறையைச் சேர்ந்த 10 வங்கிகளை ஒன்றிணைக்கும் திட்டம் 1 ஏப்ரல் 2020 முதல் அமலுக்கு வருகிறது. இதன்படி
    - பஞ்சாப் நேஷனல் வங்கியுடன், ஒரியண்டல் பாங்க் ஆப் காமர்ஸ், யுனைடெட் பாங்க் ஆப் இந்தியா ஆகிய 2 வங்கிகளை இணைக்கப்படுகிறது.
    - கனரா வங்கியுடன் சிண்டிகேட் வங்கி இணைக்கப்படுகிறது.
    - இந்திய வங்கியுடன் அலகாபாத் வங்கி இணைக்கப்படுகிறது.
    - யூனியன் பாங்க் ஆப் இந்தியாவுடன் ஆந்திரா வங்கியும், கார்ப்பரேஷன் வங்கியும் இணைக்கப்படுகிறது.
- 'பிட் காயின்' உள்ளிட்ட மெய்நிகர் நாணயங்களுக்கு இந்தியாவில் விதிக்கப்பட்டிருந்த தடையை உச்ச நீதிமன்றம் 4-3-2020 அன்று நீக்கியது.

# <u>திட்டங்கள்</u>

- **தண்ணீர் வீணாவதை தடுத்து** தண்ணீரைப் பாதுகாக்கும் முக்கியத்துவத்தை மக்களுக்கு உணர்த்துவதற்காக, **"ஜல் அம்ருதா"** (Jal Amrutha) என்ற திட்டத்தை கர்நாடக அரசு தொடங்கியுள்ளது.
- இந்தியாவின் உணவு பதப்படுத்தும் அமைச்சகமானது, கிராமப்புறங்களில் உணவு வீணாவதை தடுக்கும் நோக்கில் **"கிராம சம்ரிதி யோஜனா"** (Gram Samrithi Yojana) என்ற உணவு பதப்படுத்தும் திட்டத்தை தொடங்கியுள்ளது.
    - இத்திட்டமானது உலக வங்கியின் உதவியுடன் கிராமப்புற தொழில்முனைவர் மேம்பாடு, விவசாயப் பொருட்களை சந்தைப்படுத்துதல், உணவுப் பதப்படுத்தலில் திறனை அதிகரிக்கும் வகையில் செயல்படுத்த உள்ளது.
    - இத்திட்டம் முதற்கட்டமாக உத்திர பிரதேசம், ஆந்திரா, மகாராஷ்டிரா மற்றும் பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் தொடங்கப்பட்டுள்ளது.
- உயிரி எரிபொருள் மற்றும் பயோ எத்தனால் ஆகியவற்றை பயன்படுத்த நிதி உதவி அளிக்கும் வகையில் மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை வாயு அமைச்சகம் **"பிரதன் மந்திரி ஜீ-வன் யோஜனா"** **(Pradhan Mantri Ji-VAN Yojana-Jaiv Indhan Vatavaran Anukool Fasal Awashesh Nivaran)** என்ற திட்டத்தை தொடங்கியுள்ளது.
- நிதி ஆயோக் அமைப்பு வெளியிட்டுள்ள டெல்டா தரவரிசை அறிக்கையின் படி **(Delta Ranking report), அசாமின் ஹைலகாண்டி** மாவட்டம் செயல்திறன் அடிப்படையில் மொத்தம் 112 மாவட்டங்களில் முதலிடம் பிடித்துள்ளது.
- **நெகிழி கழிவுகளற்ற இந்தியாவிற்கான** கீதமானது மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், புவி அறிவியல், சுற்றுச்சூழல் வனம் மற்றும் பருவநிலை மாற்றத்திற்கான அமைச்சர் **ஹர்ச வாத்தனால்** அறிமுகப்படுத்தப்பட்டது.

- இது 2022ம் ஆண்டில் இந்தியாவை நெகிழியற்ற தேசமாக மாற்றுவதை நோக்கமாக்க் கொண்டது இது 7 மொழிகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

➢ அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு மாதாந்திர ஓய்வூதியம் வழங்கும் திட்டமான **"பிரதான் மந்திரி ஸ்ராம் யோகி மன்-தன் யோஜனா"** **(Pm.Sym : Pradhan Mantri Shram Yogi Maan-dhan)** என்ற திட்டம் மார்ச் 05, 2019 அன்று அகமதாபாத்தின் (குஜராத்) **வஸ்த்ரா நகரில் பிரதமர்** நரேந்திர மோடி தொடங்கியுள்ளார்.

- இத்திட்டத்தின் கீழ் அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு மாதம் 100 ரூபாய் பிடித்தம் செய்து 60 வயதிற்கு பிறகு மாதம் ரூ.3000 ஓய்வூதியமாக வழங்கப்படும்.

➢ நீர் நிலைகளின் பாதுகாப்பு மற்றும் அவற்றைப் புனரமைத்தல் போன்ற வறட்சித் தடுப்பு நடவடிக்கையின் மீது கவனம் செலுத்துவதற்காக கர்நாடக மாநில அரசானது **"ஜல் அம்ருதா"** என்ற திட்டத்தை தொடங்கியுள்ளது.

➢ உத்திரகாண்ட முதல்வர் திரிவேந்திர சிங் ராவத் **"முக்கிய மந்திரி ஆஞ்சல் அம்ரித் யோஜானா"** என்ற திட்டத்தை உத்திரகாண்ட் தலைநகர் டேராடூனில் தொடங்கியுள்ளார்.

- இத்திட்டத்தின் கீழ் அங்கன் வாடியில் உள்ள 2.5 லட்சம் குழந்தைகளுக்கு வாரம் இருமுறை 100மி.லி பால் இலவசமாக வழங்கப்படுகிறது.

➢ இளைஞர்களிடையே தொழில் முனைவை ஊக்குவிப்பதற்காக **யுவ ஸ்ரீ அர்பன்** என்ற ஒரு புதிய திட்டத்தை மேற்குவங்க முதல்வர் தொடங்கியுள்ளார்.

➢ கைவினைக் கலைஞர்களுக்கு நிதியுதவி அளிப்பதற்காக **"முக்கிய மந்திரி காரிகர் சஹாயாதா"** என்ற திட்டத்தை ஒடிசா மாநில அரசானது தொடங்கியுள்ளது.

➢ மக்களிடையே டிஜிட்டல் முறையில் **தேர்தல் கல்வியறிவை மேம்படுத்துவதற்கான** முதல் முயற்சியாக, **அசாம் மாநிலம்**

**பொது சேவை மையம்** **(Common Service Center) ”i-help”** என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது,

- வடகிழக்கு மாநிலங்களின் முன்னேற்றத்திற்காக “**ஸ்வதேஷ் தர்ஷன்**“ என்ற திட்டத்தை சுற்றுலாத்துறை தொடங்கியுள்ளது. இத்திட்டத்தை **சிக்கிம் மாநிலம்** முதன் முதலில் அமல்படுத்தியுள்ளது.
- அமைப்பு சாரா நிறுவனங்களின் தொழிலாளர்களுக்கு மாதம் ரூபாய் 3000 ஓய்வூதியம் வழங்குவதற்காக மத்திய இடைக்கால பட்ஜெட்டில், ”**பிரதான் மந்திரி ஸ்ராம் யோகி மந்தன்**” என்ற திட்டம் தொடங்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
- ஆந்திரப்பிரதேச மாநில அரசானது விவசாயிகளுக்கு நிதியுதவி அளிப்பதற்காக “**அன்னதத்தா சுஹிபாவா** **“(Annadata Sukhibhava Scheme)** என்ற புதிய திட்டத்தை தொடங்கியுள்ளது.
- **தேசிய கிராமப்புற பொருளாதார மாற்றத்திற்கான திட்டம்**“ **(National Rural Economic Transformation Project)** எனும் புதிய திட்டத்தை, **தீன்தயாள் அந்தியோதயா யோஜனா** எனப்படும் தேசிய கிராமப்புற வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் அமல்படுத்துவதற்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. தீன் தயாள் அந்தியோஜனா, கிராமப்புற மக்களுக்கு திறன் வளர்ப்பு பயிற்சி அளித்து அவர்களின் பொருளாதார நிலையை உயர்த்த 2011ம் ஆண்டு தொடங்கப்பட்டது.
- 60 வயதைக் கடந்த அனைவருக்குமான ”**முக்கிய மந்திரி விரிதாஜன் ஓய்வூதிய திட்டம்**” **(MVPY)** மற்றும் 60 வயதிற்கும் மேற்பட்ட பத்திரிக்கையாளர்களுக்காக, ”**பீகார் பட்ராகர் சம்மன் யோஜனா**” **(BPSY)** என்ற ஓய்வூதிய திட்டத்தையும் பீகார் தொடங்கியுள்ளது.
    - இவ்விரு திட்டங்களும் ஏப்ரல் 1, 2019ல் முதல் நடைமுறைக்கு வரவுள்ளது.
- விவசாயிகளுக்கு ஆண்டுக்கு ரூ.6000 உதவித் தொகை வழங்கும் “**பிரதான் மந்திரி விவசாய நலத்திட்டம்**” **(Pradhan Mantri Kisan**

**Samman NIdhi Yojana)** என்ற திட்டத்தை பிரதமர் மோடி அவர்கள் பிப்ரவரி 24, 2019 அன்று உத்திரபிரதேசத்தின் கோரக்பூரில் தொடங்கி வைத்துள்ளார்.

- இந்த நிதியுதவியானது, 2 **ஹெக்டேருக்கு குறைவாக நிலம் வைத்திருக்கும்** விவசாயிகளுக்கு, மத்திய அரசால் வழங்கப்பட்டுள்ளது.

➢ குடியிருப்பு அல்லாதவர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்காக **(Kerala to launch NRI Pension Scheme)** “**பிரவாசி ஓய்வூதிய திட்டம்**” என்ற திட்டத்தை கேரளா அறிமுகப்படுத்தியுள்ளது.

➢ இந்தியாவில் உள்ள சமயம் சார்ந்த பகுதிகளுக்கு அரசு நிதியளிக்கும் சுற்றுலா திட்டமான “**பிப்ரவரி தீர்த்த தர்சன் யோஜனா**“ என்ற திட்டத்தை இந்திய பிரதமர் புதுடெல்லியில் தொடங்கி வைத்துள்ளார்.

- இதற்கான வயது வரம்பு 45 முதல் 65 வயது ஆகும்.

➢ ஒடிசா அரசின் பல்வேறு திட்டங்களைப் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்த “**பீத்தா**“ **(PEETHA – Peoples Empowerment Enabling Transparency and Accountability)** என்னும் புதிய முன்முயற்சி திட்டத்தை அம்மாநில அரசு தொடங்கியுள்ளது.

➢ கர்நாடக மாநிலத்தில் உள்ள **பெங்களூரு மாநகராட்சி** பள்ளிகளில் **டிஜிட்டல் தொலைக்காட்சி** மூலம் கற்பித்தல் முறையான “**ரோஷினி**“ என்னும் திட்டத்தை அம்மாநில அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

- இத்திட்டத்தை **மைக்ரோசாப்ட் நிறுவனம், துார்தர்ஷன் டிஜிட்டல் தொலைக்காட்சி** மூலம் செயல்படுத்துகிறது.

➢ ”ஆரோக்கிய சஞ்சீவினி” என்ற பெயரில் புதிய மருத்துவ காப்பீட்டு திட்டத்தை ஏப்ரல்-1 2020 காப்பீடு ஒழுங்காற்று ஆணையம் நடைமுறைப்படுத்த அறிவிக்கப்பட்டுள்ளது

➢ சுகன்யா திட்டம் என்ற பெயரில் பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் பெண்களுக்கு தற்காப்பு கலை பயிற்சி வழங்கும் திட்டம்

மேற்கு வங்க மாநிலம் கொல்கத்தா நகர காவல்துறை அமல்படுத்தியுள்ளது

- அம்மா வாடி திட்டம் என்ற பெயரில் குழந்தைகளுக்கு கல்வி வழங்குவதற்காக ஏழைத் தாய்மார்களுக்கு ஆண்டிற்கு 15,000 வழங்க ஆந்திர மாநில அரசு நிதியுதவி வழங்கியுள்ளது
- தேசிய பெண்கள் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் ஆயிரத்து 23 சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட உள்ளன
- ”**யாஷ்ஸ்வினி திட்டம்**” பெண்கள் சுய உதவி குழுக்களுக்கு ரூபாய் 5 **லட்சம் வட்டியில்லா** கடன் வழங்கும் திட்டத்தை **கோவா அரசு** அறிமுகப்படுத்த உள்ளது.
- **சிவ போஜனா திட்டம்** என்ற பெயரில் பத்து ரூபாய்க்கு மதிய உணவு வழங்கும் திட்டம் **மகாராஷ்டிரா மாநிலத்தில்** தொடங்கி உள்ளது.
- இந்தியாவின் முதல் நீருக்கு அடியில் ஆன மெட்ரோ திட்டமான கல்கத்தா மெட்ரோ திட்டம் **2022-ல்** திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது
- **போல் நெட்** என்ற பெயரில் நாடு முழுவதும் காவல்துறையினருக்கு **தகவல் தொடர்பு சேவையை மத்திய உள்துறை அமைச்சகம்** தொடங்கியுள்ளது
- சென்னை - அந்தமான் நிக்கோபார் கிடையே கடலுக்கு அடியிலான **ஒளி இலை கம்பிவட இணைப்பு திட்டத்தை** மத்திய தகவல் தொடர்பு மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர் **ரவிசங்கர் பிரசாத் அவர்களால் சென்னையில்** தொடங்கி வைக்கப்பட்டது
- தாலுகா அலுவலகத்திற்கு செல்லாமல் வீட்டில் இருந்தபடியே இணையதளம் மூலம் பட்டா மாறுதல் பெறலாம் என்ற புதிய நடைமுறையை தமிழக அரசு கொண்டு வந்துள்ளது
- சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகத்தின் திட்டமான தேசிய காசநோய் கட்டுப்பாட்டு திட்டம் தற்போது **தேசிய காசநோய் ஒழிப்பு திட்டம்** என பெயர் மாற்றப்பட்டுள்ளது

- முக்கிய மந்திரி சம்ரிதி யோஜனா என்ற திட்டம் ஏழை குடும்பங்களுக்கு ரூபாய் 6 ஆயிரம் நிதி உதவி வழங்கும் திட்டம் ஹரியானா அரசு செயல்படுத்தி உள்ளது. இதில் 5 ஏக்கருக்கும் குறைவாக நிலம் வைத்திருப்போர் பயன்பெறலாம்
- ஃபேஸ்புக் நிறுவனத்தில் டிஜிட்டல் கல்வியறிவு திட்டமான We think Digital இது பெண்களுக்கு டிஜிட்டல் கல்வி வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.
- குடும்பஸ்ரீ திட்டம் கேரள மாநில அரசு மானிய விலையில் உணவு வழங்கும் திட்டம்
- நாட்டிலேயே முதல் முறையாக நீலகிரியில் மனித கழிவுகள் இயற்கை உரம் தயாரிக்கும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது
- வந்தே பாரத் திட்டம் நோய்த்தொற்று சூழலில் உலகின் பல்வேறு நாடுகளில் சிக்கித் தவிக்கும் இந்தியர்களை மீட்டு வரும் நடவடிக்கையாக இந்திய வெளியுறவு அமைச்சகம் மேற்கொண்டுள்ளது
- தாத்தா பாட்டி திட்டம் நிதி ஆயோக் மற்றும் பிரிமால் பவுண்டேசன் இணைந்து நாடு முழுவதும் உள்ள மூத்த குடிமக்களுக்கான நல்வாழ்வு திட்டம்
- இ கால்குலேட்டர் திட்டத்தை மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது இது புதிய மற்றும் முந்தைய வரிமுறையில் கிடைக்கக்கூடிய அனுகூலங்களை தெரிந்து கொள்ளும் வகையில் அறிமுகம் செய்துள்ளது
- மிஷன் சாகர் திட்டம் வைரசால் பாதிக்கப்பட்ட இந்தியாவின் நட்பு நாடுகளுக்கு உணவு பொருட்கள், ஆயுர்வேத மருந்துகள், மாத்திரைகள் கடல்வழியாக இந்திய கடற்படைக் கப்பலான ஐஎன்எஸ் கேசரி மூலம் அனுப்பி வைப்பதற்கான திட்டம்
- மத்திய அரசின் திட்டத்தின் கீழ் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு மாதந்தோறும் ஊக்கத் தொகையுடன் கூடிய இலவச தொழிற்பயிற்சி சென்னை அம்பத்தூர் தொழிற்பேட்டையில் தொடங்கப்பட்டுள்ளது

- ஸ்ட்ரைவ் திட்டம் "ஜன்சேவகா" திட்டம் என்ற பெயரில் அரசு சேவைகளை வீடுகளுக்கே சென்று வழங்கும் திட்டத்தை கர்நாடக மாநில அரசு அறிவித்துள்ளது
- ஆபரேஷன் நமஸ்தே என்ற பெயரில் இந்திய ராணுவத்தில் பணியாற்றும் வீரர்களை Corona நோய் தொற்றிலிருந்து பாதுகாக்க செயல்திட்டத்தை இந்திய ராணுவம் தொடங்கியுள்ளது
- பிரதமரின் கரிப் கல்யாண் திட்டம் என்ற பெயரில் கரோனா எதிராக போராடி வரும் சுகாதார பணியாளர்களுக்கான காப்பீட்டு திட்டம்
- ஜீவன் அம்ரித் யோஜனா என்ற பெயரில் கரோனா நோய்க்கு எதிராக நோய் எதிர்ப்பை அதிகரிக்க செய்வதற்கான திரிகுட் சர்னா என்ற ஆயுர்வேத மருந்தை பொதுமக்களுக்கு வழங்குவதற்கான திட்டத்தை மத்திய பிரதேச அரசு அறிமுகப்படுத்தியுள்ளது
- ஜீவன் சக்தி யோஜனா என்ற பெயரில் நகர்ப்புற பெண்கள் அரசு நிதி உதவியுடன் வீட்டிலிருந்தே மாஸ்க் தயாரிப்பதில் ஊக்குவிக்கும் திட்டத்தை மத்திய பிரதேச அரசு தொடங்கியுள்ளது
- முதலமைச்சர் கரோனா-19 யோதா கல்யாண் யோஜனா என்ற பெயரில் அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் சுகாதார உதவியாளர்களுக்கு ரூபாய் 50 லட்சம் சுகாதார காப்பீட்டு திட்டத்தை மத்திய பிரதேச அரசு தொடங்கியுள்ளது
- தன்வந்திரி திட்டம் மருந்துகளை நோயாளியின் வீட்டிற்கே சென்று டெலிவரி செய்யும் திட்டத்தை அசாம் மாநில அரசு தொடங்கியுள்ளது.
- சமாதான் திட்டம் கரோனா வைரஸ் பரவுதலை தடுக்கும் முயற்சியில் மாணவர்களின் கண்டுபிடிப்புகளை ஊக்குவிப்பதற்கான போட்டியை மத்திய மனிதவள அமைச்சகம் தொடங்கியுள்ளது.
